ஆசீர்வாதத்தின் வழி...

ர சாம்ஜெபத்துரை

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

CAROLINE.
83/2 Pillamma Block
Srirampuram
Bangalore -21

அர்ப்பணம்

இம்மைக்குரிய ஆசீர்வாதங்களினாலும்
உன்னதங்களுக்குரிய ஆசீர்வாதங்களினாலும்
பரலோகத்துக்குரிய ஆசீர்வாதங்களினாலும்
எம்மை ஆசீர்வதிக்கும்
என் அன்பு இயேசு இராஜாவுக்கே!

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	ஆசீர்வாதத்தின் வழி ... !	5
2.	கர்த்தர் கொடுக்கிறார் !	18
3.	என்ன கொடுக்க வேண்டும் ?	25
4.	யாருக்கு கொடுக்க வேண்டும் ?	36
5.	கொடுத்தலின் ஆசீர்வாதங்கள் !	45
6.	எப்படி கொடுக்க வேண்டும் ?	56

அத்தியாயம் 1

ஆசீர்வாதத்தின் வழி...!

என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் (பிலி 4:19).

நாம் எல்லோரும் ஆசீர்வாதத்தை விரும்புகிறோம். ஒருவராவது தரித்திரத்தை விரும்புவதில்லை. மன மகிழ்ச்சியை விரும்புகிறோம். பாடுகளையும், துன்பத்தையும் நாம் விரும்புவதில்லை. தேவ ஆசீர்வாதங்கள் நம்மில் பெருகும்படி நாம் என்னச் செய்ய வேண்டுமென்பதை இந்த அத்தியாயத்திலே நாம் தியானிப்போமா?

அநேக விசுவாசிகளிடமிருந்து வரும் கடிதங்கள் என் இருதயத்தை மிகவும் உடைக்கிறதாக இருந்தது. ''ஐயா, என் கடன் தொல்லையை என்னால் தாங்க முடியவில்லை, நாங்கள் குடும்பமாக தற்கொலை செய்து கொள்ளலாமா?'' என்று எழுதுகிறார்கள். இன்னும் சிலர், ''ஐயா என்னுடைய வீட்டில் ஒருவருக்கும் சரியாய் வேலையில்லை, கணவனுக்கு இருந்த வேலையும் பறி போய் விட்டது. கொந்தளிக்கும் கடலிலே, சீறும் புயல் காற்றிலே நாங்கள் தத்தளிக்கிறோம். எங்களுக்காக ஜெபிக்க மாட்டீர்களா? எங்களைக் காப்பாற்ற மாட்டீர்களா?" என்று எழுதுகிறார்கள்.

ஆகவே இந்த கட்டுரையின் மூலம் கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதங்களையும், சுதந்திரங்களையும், கிருபைகளையும் பெற்றுக்கொள்ளுவதெப்படி என்பதை மனம் திறந்து எழுதத் தீர்மானித்தேன்.

1. **விதையுங்கள்:-**

ஒரு விவசாயி தன்னுடைய வயல் நிலத்தில் போய் விதைக்காமல், அறுவடையை எதிர்பார்க்கிறது எப்படி? அறுவடை செய்ய, அறிவாளோடு கூட வயலுக்குச் செல்வா

னென்றால் அங்கு வெறும் மண்தான் இருக்கும். காரணம், அவன் விதைக்கவில்லை. விதைப்பு இல்லாததால் அங்கே விளைச்சலில்லை. விளைச்சலில்லாததால் அங்கே அறுவடையில்லை.

ஆவிக்குரிய ஜீவியத்திலும் இதுமிகவும் உண்மையானது. "கொடுங்கள்; அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (லூக் 6:38). அநேகர் கர்த்தருக்கு கொடுப்பதற்கு விரும்புவதில்லை. எப்படி கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதத்தை எதிர்பார்க்க முடியும்? ஆண்டவரே என்னை ஆசீர்வதியும் என்று எப்படி கேட்க முடியும்?

நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார் அறுவடை செய்ய வேண்டிய அளவை நிர்ணயிக்கிறவர்கள் நீங்கள்தான். உங்களுக்கு எவ்வளவு அறுவடை வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களோ அதற்கு தகுந்தபடியே, முன்னால் நீங்கள் விதைக்க வேண்டும்.

அநேகம் பேர்: ஆண்டவரே, நீர் முதலில் தாரும்; அதற்கு பிறகு நான் உமக்கு கொடுக்கிறேன் என்று சொல்லுகிறார்கள். கர்த்தர் அதை ஏற்றுக் கொள்ளுவதில்லை. நாம் முதலில் கர்த்தருக்குக் கொடுத்தால்தான் கர்த்தர் ஆசீர்வதித்து திரும்ப நமக்குக் கொடுப்பார்.

எலியா தீர்க்கதரிசி சாறிபாத் விதவையைப் பார்த்து, முதலில் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டு வா; பின்பு உனக்கும் உன் குமாரருக்கும் பண்ணலாம் என்று சொன்னான் (I இராஜா 17:13). வேதம் சொல்லுகிறது, அவள் எலியாவின் சொற்படி செய்தபடியினாலே அவளும், அவளுடைய குமாரரும், குடும்பத்தாரும், பஞ்சக்காலம் முழுவதும் போஷிக்கப்பட்டார்கள். தேவபிள்ளையே, முதலில் விதையை விதை. பின்பு அறுவடையை எதிர்பார்.

வேதம் சொல்லுகிறது: ''சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான்; பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்'' (II கொரி 9:6, 7).

2. தசம பாகம் செலுத்துங்கள்:-

கர்த்தர் உங்களுக்கு கொடுக்கிற எல்லாவற்றிலும் தேவனுக்கென்று மனப்பூர்வமாக தசம பாகங்களைச் செலுத்துங்கள். நீங்கள் எந்த ஊழியர் இடத்தில் கொடுத்தாலும், அதை கர்த்தருடைய கையில் கொடுக்கிறதாக எண்ணி கொடுங்கள். ஏனென்றால், தசமபாகம் கர்த்தருடையது. இந்தச் சிறியரில் ஒருவனுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தசம பாகம் நியாயப்பிரமாணத்தின் காலத்திற்கு முன்பிருந்தே இருந்தது. ஆபிரகாம் மெல்கிசேதேக்குக்கு தசம பாகம் கொடுத்தான் (ஆதி 14:18-20). தசம பாகம் செலுத்தின ஆபிரகாமை மெல்கிசேதேக் மிகவும் ஆசீர்வதித்தான். வானத்தையும், பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிரகாமுக்கு உண்டாவதாக என்றுச் சொல்லி ஆசீர்வதித்தான் (ஆதி 14:19).

யாக்கோபு பொருத்தனை செய்து கர்த்தருக்கு தசம பாகம் செலுத்தினான் (ஆதி 28:20-22). ஆகவே, வெறும் கையும், கோலுமாய் சென்ற யாக்கோபை கர்த்தர் மிகவும் ஆசீர்வதித்து இரண்டு பெரிய பரிவாரங்களுடன் கானானுக்குள் திரும்பி வரும்படி கர்த்தர் கிருபை செய்தார்.

தசம பாகம் செலுத்துவது மிகுதியான ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். அநேகருக்கு அந்த இரகசியம் புரிவதில்லை. ஆபிரகாம் தசமபாகம் கொடுத்து ஆசீர்வதிக்கப்பட்டார். ஆனால் லோத்தைக் குறித்து வாசிக்கும்போது அவன் தசமபாகம் செலுத்தினதாக வேதம் சொல்லவில்லை! அவன் தனக்கு நீர் வளமும், நிலவளமும் உள்ள இடம் கிடைக்க வேண்டுமென்று விரும்பினானே தவிர, கர்த்தருக்கு

தசமபாகம் கொடுக்க அவன் பிரியப்படவில்லை. இதன் விளைவாக, அவன் வசித்த வீடும், அவன் இருந்த தேசமும் அக்கினிக்கு இரையாக்கப்பட்டது.

தேவபிள்ளையே, நீ கர்த்தருக்கு காணிக்கைச் செலுத்தும் போது கர்த்தர் வானத்தின் பலகணிகளைத்திறந்து உன்னை ஆசீர்வதிப்பார், அவர் வாக்குத்தத்தத்தில் உண்மையுள்ளவர். கர்த்தர் சொல்லுகிறார்: ''நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்'' (மல் 3:10).

எனக்கு நினைவு தெரிந்த நாட்களில் இருந்துஎன்னுடைய பெற்றோர் கர்த்தருக்கென்று தசமபாகம் செலுத்தி வந்தார்கள். என்னுடைய பெற்றோருக்கு நாங்கள் நான்கு பிள்ளைகள். இதனால் எங்களுடைய பெற்றோருக்கோ, எங்களுக்கோ கர்த்தர் எந்தக் குறைவும் வைக்கவில்லை. நான்கு பிள்ளைகளுக்கும் நல்ல படிப்பைக் கர்த்தர் கொடுத்தார். நாங்கள் படித்து முடித்து சென்னைக்கு வந்தபோது, எந்த மனுஷருடைய சிபாரிசும் இல்லாமல் கர்த்தராகவே எங்களுக்கு நல்ல வேலையைக் கட்டளையிட்டார்.

நான் வருமானவரி இலாகாவில் பணியாற்றினபோது கர்த்தருக்கென்று தசமபாகம் செலுத்த தீர்மானித்தேன். பல மாதங்களில் தசம பாகத்தைப் பார்க்கிலும் மிகவும் அதிகமாகவே கர்த்தருடைய ஊழியங்களுக்கு தாராளமாக மனப்பூர்வமாகக் கொடுத்தேன்.

நான் முழு நேர ஊழியத்திற்கு இறங்கி வந்தபோது, ஒரு கர்த்தருடைய ஊழியர் சொன்னார்: சாம் ஜெபத்துரை முன்பு அரசங்கத்தில் வேலை செய்தார். அது அநேகம் தேவனுடைய ஊழியர்களுக்கு பிரயோஜனமாக இருந்தது. இப்பொழுது அவர் வேலையை ராஜினமா செய்கிறார். இது எங்களைப் போன்ற ஊழியர்களுக்கு ''பெரிய அடி'' என்று குறிப்பிட்டார். அந்த வார்த்தைகள் என் செவிக்கு எட்டிய

வுடன் என் உள்ளம் வேதனையடைந்தது. ''ஆண்டவரே, நான் அரசாங்கத்தில் இருந்தபோது உமது ஊழியர்களுக்குக் கொடுத்ததைப் பார்க்கிலும், எந்தச் சம்பளமும், வருமானமும் இல்லாமல் முழு நேர ஊழியத்திற்கு இறங்கி வரும்போது, உம்முடைய ஊழியத்திற்கு அதிமாகவே கொடுப்பேன்'' என்று நான் பொருத்தனை செய்தேன். என்னுடைய மனைவிரெவின்யு இன்ஸ்பெக்டராக பணியாற்றினாள், அவளும் வேலையில் இருந்து நின்று விட்டாள். அவள் நின்று இரண்டு மாதங்களுக்குள்ளாக நானும் வேலையை ராஜினமா செய்தேன். ஆனாலும், கர்த்தர் எங்களை அற்புதமாக போஷிக்க உண்மையுள்ளவராகவே இருந்தார். ஒவ்வொரு நாளும் வானத்தின் பலகணிகளைத் திறந்தார். இன்றும் அருமை ஆண்டவர் எங்களை அற்புதமும், ஆச்சரியமுமாய்ப் போஷிக்கிறார். எங்களுக்கு எந்தக் குறைவும் அவர் வைக்கவில்லை. தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

ஒரு உண்மை சம்பவத்தை உங்களோடுகூட பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். ஒரு ஏழை சகோதரி ஒருவள் இருந்தாள். அவள் தினசரி கூலி வேலை செய்கிறவள். பருத்தித் தோட்டத்திலே அவள் வேலை செய்யும் போது அவளுக்கு தினசரி கிடைக்கும் இரண்டு, மூன்று ரூபாயில் அன்றன்றும் தசமபாகமாக 25 காசுகள், 30 காசுகள் போதகரிடத்தில் கொண்டுபோய் கொடுப்பதுண்டு.

போதகர் அதை ஸ்தோத்திரத்தோடும், ஜெபத்தோடும் வாங்கி, ஏன் அம்மா, நீ தினந்தோறும் கொண்டு வருகிறாய்; சேர்த்து வைத்து விட்டு வாரத்திற்கு ஒரு முறை ஆலயத்திற்கு கொண்டு வரலாமே என்று கேட்டார். அதற்கு அவள் ஐயா, வீட்டில் தாண்டவமாடும் வறுமையினால் நான் அதை செலவு செய்து விட்டால் என்னச் செய்வது என்று பயந்துதான் ஒவ்வொரு நாளும் மாலையில் நான் உங்களுக்கு கொண்டு வந்து கொடுக்கிறேன் என்று பதில் கூறினாள்.

அவளுக்கு ஒரு மகள் இருந்தாள். அந்த மகளுக்கு அவ்வளவாக படிப்பு வரவில்லை. மிகவும் மந்தமான குழந்தை. மூளை

வளர்ச்சியில்லை. இரண்டாவது வகுப்பை அவள் தாண்டவே யில்லை. பதினூன்கு வயதாகியும்கூட தன்னுடைய பெயரைக் கூட அவளால் சரியாக எழுத முடியவில்லை. ஆகவே, பள்ளிக்கூடத்திலிருந்து "நீ வீட்டிற்கு போ" என்று சொல்லி அவளை துரத்தி விட்டார்கள். கூலி வேலை செய்த அந்தத் தாயோடுகூட அந்த மகளும் வயல்வெளிக்கு செல்லலானுள்.

ஒரு நாள் அந்தக் கிராமத்தில் ஒரு எழுப்புதல் கூட்டம் நடந்தது. தாய் அந்த எழுப்புதல் கூடத்திற்கு புத்தி வளர்ச்சியில்லாத அந்த மகளையும் அழைத்துக் கொண்டு போனுள். கூட்டத்தின் முடிவிலே இயேசுவை ஏற்றுக் கொள்ளுகிறவர்கள் முன்னே வரலாம் என்று போதகர் அழைப்பு விடுத்தபோது அந்த புத்தி வளர்ச்சியில்லாத அந்த மகளும் தன்னை அறியாமலேயே எழுந்து முன்னுல் போனுள். போதகர் அவளுடைய தலையிலே கைவைத்து ஜெபித்தார். அன்று அவளுடைய சரீரத்தில் பெரிய மாறுதல் ஏற்பட்டது. அன்றைக்கு அவள் இரட்சிக்கப்பட்டாள். அன்று முதல் அவளுடைய மூளை வளர ஆரம்பித்தது. சில நாட்களுக்குள் பரிசுத்தாவியின் அபிஷேகத்தையும் பெற்றுக் கொண்டாள். மற்றவர்களோடு சேர்ந்து ஊக்க மாய் ஜெபிக்க ஆரம்பித்தாள்.

முன்பெல்லாம் அவள் சரியாய் குளிப்பதில்லை. தலை ஒழுங்காக வாருவதில்லை. தலைமுடி பம்பையும், பரட்டையு மாய், ஒன்றேடொன்று ஒட்டி, படை படையாகத் தொங்கும். ஆனுல், அவள் இரட்சிக்கப்பட்டபோதோ, அவள் சுபாவம் முற்றிலும் மாறினது. ஒழுங்காக குளித்தாள். நாகரீகமாய் நடந்தாள் நன்ருக உடுத்தினுள். ஊக்கமாய் ஜெபித்தாள். அவள் ஜெபித்த ஜெபங்களுக்கெல்லாம் கர்த்தர் ஆம் என்றும் ஆமென் என்றும் பதில் கொடுத்தார்.

அவள் நல்ல வாலிபப் பருவம் அடைந்தவுடன், அவளைப் பெண் கேட்டுப் பக்கத்து கிராமத்திலுள்ள ஒரு பணக்கார வாலிபன் முன்வந்தான். எளிதான முறையில் திருமணம் நடந்தது. கர்த்தர் அன்று முதல் அவர்களை மிகவும் அதிக

மாய் ஆசீர்வதித்தார். அந்த வாலிபப் பையன் பில்டிங் காண்ட்ரெக்ட் வேலை செய்தான். அதில் அவனுக்கு நல்ல வருமானம் கிடைத்தது. பெரிய பெரிய கட்டிடங்களை அவன் நிர்மாணித்தான். மட்டுமல்ல, அவன் தங்களுக்கென்று ஒரு பெரிய பங்களா வீட்டைக் கட்டினான். கார் வசதி களெல்லாம் பெருகினது. சமுதாயத்தில் பெரிய அந்தஸ்தை மதிப்பை அவர்கள் பெற்றார்கள்.

இந்தப் பெண் எழும்பி சாட்சி கொடுக்கும்போது, என்னுடைய தாய் மற்ற வயல்களிலே பருத்தி சேகரித்து அதிலே கிடைக்கும் பணத்தில் தசமபாகம் கொடுத்தார்கள். இன்று நான் ஆசீர்வதிக்கப்பட்டேன். இன்றைக்கு நானும் என் கணவரும் தசமபாகம் செலுத்துகிறோம் என்று சொன்னாள். ஆம், உண்மையாகவே தசமபாகம் கொடுத்த அவர்களை கர்த்தர் வானத்தின் பலகணிகளைத் திறந்து ஆசீர்வதித்தார்!

தேவபிள்ளையே, நம்முடைய தேவன் தரித்திரரை ஐசுவரியவான்களாக்குகிறவர். கிறிஸ்துவின் சுவிசேஷமும் இது தான். "தரித்திரருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் படி என்னை அபிஷேகம் பண்ணினார்" என்று இயேசு சொல்லுகிறார் (லூக் 4:18). தரித்திரத்தை ஐசுவரியமாக்கு கிற சுவிசேஷம் கர்த்தருக்குக் கொடுத்து கர்த்தரிடத்தில் பெற்றுக் கொள்ளுவதில் இருக்கிறது. அல்லேலூயா!

3. ஆசீர்வாதத்தின் முகாந்தரம்:-

கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்க ஒரு முகாந்தரம் தேவை. அந்த முகாந்தரத்தை பார்த்து கர்த்தர் நிச்சயமாகவே நம்மை ஆசீர்வதிப்பார்.

ஆபிரகாம், தனக்கு ஒரே பேறானவனையே கர்த்தருக் கென்று ஒப்புக் கொடுத்தான். கர்த்தருக்குக் கொடுப்பதற்கு அவன் முறுமுறுக்கவில்லை. மற்றவர்களிடம் ஆலோசனை கேட்கவுமில்லை. வேதம் சொல்லுகிறது, மரித்தோரிலிருந்து அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக் கொண்டான் (எபி 11:19).

ஆபிரகாம் கர்த்தருக்கு தன்னுடைய ஒரே மகனை கொடுக்க தீர்மானித்தபோது, கர்த்தர் அவனுக்கு வானத்தின் நட்சத்திரங்களைப்போல சந்ததியைக் கொடுக்க சித்தங்கொண்டார். இன்றைக்கும், ஆபிரகாமின் சந்ததி உலகத்தையெல்லாம் நிரப்பியிருக்கிறது.

சூனேம் ஊரிலிருந்த கனம் பொருந்திய ஸ்திரீ, தேவ மனிதனாகிய எலிசாவைப் போஷித்து, அவனுக்கென்று மேல் வீட்டறையைக் கொடுத்தாள். தேவன் அவளை ஆசீர்வதித்து அவளுக்கு பிள்ளையைக் கொடுத்தார். அவன் மரித்தபோது, உயிர்ப்பித்தார். வேதத்தில் நீங்காத இடத்தை அவளுக்கென்று கொடுத்தார் (II இராஜா 4:10).

அன்னாள் தனக்கு குழந்தை பிறப்பதற்கு முன்பாகவே, விசுவாசத்தினால் தனக்கு பிறக்கும் முதல் குழந்தையை கர்த்தருக்கென்று கொடுக்க தீர்மானித்தாள். பிரதிஷ்டை செய்தாள். கர்த்தர் அவளுக்கு ஆசீர்வாதமான சாமுவேலோடுகூட இன்னும் மூன்று குமாரரையும், இரண்டு குமாரத்திகளையும் கொடுத்தார் (II சாமு 2:21).

மரியாள் தன்னை ஆண்டவருக்கு அடிமை என்று அர்ப்பணித்து தன்னை முழுவதும் அவருக்கென்று கொடுத்தாள். அவள் மூலமாக இயேசு கிறிஸ்து பூமியில் அவதரித்தார். நாம் கர்த்தருக்குக் கொடுக்கும்போது, கர்த்தர் நம் உள்ளத்தைப் பார்க்கிறார்; நம்முடைய தியாகத்தைப் பார்க்கிறார். அவர் மனம் இறங்கி ஆசீர்வதிக்கிறார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு நான் ஒரு C.S.I. ஆலயத்தில் பிரசங்கித்தேன். நான் பிரசங்கித்ததற்கு காணிக்கையாக அந்தச் சபையார் எனக்கு பத்து ரூபாய் காணிக்கை கொடுத்தார்கள். அதை வாங்கி ஜெபித்த உடன் திடீரென்று கர்த்தர் என்னுடைய கண்களுக்கு முன்பாக ஒரு ஏழை ஊழியரை ஞாபகப்படுத்தினார். மட்டுமல்ல, இந்த ரூபாயில் அவருக்கு அரிசி வாங்கிக் கொண்டு போ, என்று என் உள்ளுணர்வின் மூலமாக என்னோடு பேசினார்.

நான் அந்தப் பணத்திலே ஒரு சிறிய துணிப்பை ஒன்றை வாங்கி, அதை அரிசியால் நிரப்பிக் கொண்டு அவரைப் பார்க்கப் போனேன். அவர் ஞாயிறு ஆராதனை நடத்தி விட்டு, சாப்பிடுவதற்கு ஒன்றுமில்லாமல் முழங்காலில் நின்று ஜெபித்துக்கொண்டிருந்தார். அவர் சொன்னார்: என்னுடைய விசுவாசிகள் ஏழை விசுவாசிகள். எனக்கு காணிக்கை கிடைத்தது இரண்டே இரண்டு ரூபாய்தான். அதை சபைக்கு வந்த மிகவும் ஏழையான ஒரு சகோதரிக்கு கொடுத்துவிட்டேன். சமைப்பதற்கு ஒன்றுமில்லாமல் முழங்காலில் நின்று கர்த்தரின் கையை நோக்கி பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்றார். நான் அரிசியை எடுத்துக்கொண்டு போனவுடன் அவருக்கிருந்த சந்தோஷம் கொஞ்ச நஞ்சமல்ல. நான் பசியாக இருப்பதையறிந்து கர்த்தர் உங்கள் மூலம் அரிசியை கொண்டு வந்தாரே என்று மிகவும் மகிழ்ச்சியடைந்தார். நாங்கள் இருவருமாக கர்த்தரைத் துதித்தோம்.

இன்னொரு முறை நான் சிவகாசியில் கூட்டங்கள் நடத்திக் கொண்டிருந்தேன். அப்பொழுது கர்த்தர் திடீரென்று என் மனக் கண்கள் முன்பாக ஒரு ஊழியருடைய முகத்தை திரும்பத் திரும்பக் காண்பித்து, அவர் மிகுந்த தேவையில் இருப்பதாகவும், நான் அவருக்கு உதவி செய்ய வேண்டுமென்றும் தெரிவித்தார். அப்பொழுது எனக்கே மிகுந்த பண நெருக்கடி. இருந்தபோதிலும் கர்த்தருக்கு கீழ்ப்படிய தீர்மானித்தேன்.

நான் உடனே கர்த்தரிடம், சரி ஆண்டவரே, நீர் என்னச் சொல்லுகிறீரோ நான் அதன்படி செய்கிறேன். நான் எவ்வளவு அவருக்கு கொடுக்க வேண்டுமென்று கர்த்தரிடம் கேட்டேன். கர்த்தர் ரூ. 5,000/- என்று தெளிவாக எனக்கு உணர்த்தினர்.

சிவகாசியில் என்னை அழைத்திருந்த சபையார் நான் மூன்று நாட்கள் கன்வென்ஷன் கூட்டங்களில் பேசினதால் எனக்கு ரூ 500/- காணிக்கை கொடுத்தார்கள். தனிப்பட்ட முறையில் என்னிடத்தில் வந்து ஜெபிக்க வந்த விசுவாசிகள்

எல்லோருமாக மொத்தம் ரூ 600/- கொடுத்தார்கள். சிவகாசி ஊழியத்தை முடித்து சென்னை திரும்பும் வழியில் என் கையில் ரூ 1,100/- இருந்தது. நான் சென்னை திரும்பி வந்தவுடன் எனக்கு வந்த மணியார்டர்களைப் பார்த்தேன். புத்தகத்திற்கும், அன்றன்றுள்ள அப்பத்தின் சந்தாவாகவும், காணிக்கையாகவும் விசுவாசிகள் ஏறக்குறைய ரூ 4,000/- அனுப்பியிருந்தார்கள். ஆகவே, மொத்தம் ரூ 5,000/-ஐ எடுத்துக் கொண்டு கர்த்தர் காண்பித்த அந்த ஊழியரை பார்க்க ஓடிப் போனேன். நான் அதை அவருக்கு கொடுத்த போது அவருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. அவர் உண்மையிலேயே மிகுந்த தேவைகளின் மத்தியிலே யாரிடம் சொல்ல என்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்த நேரம் அது. அவருடைய அருமை மனைவி வியாதிப்பட்டிருந் தார்கள். பிள்ளைகளுக்கு கல்லூரி படிப்பிற்கான கட்டணம் கட்ட முடியாமலிருந்தது.

அப்படிப்பட்ட ஒரு இக்கட்டான சூழ்நிலையில் கர்த்தர் அவரைப்பார்த்து நீ நேராக செங்கல்பட்டுமாவட்டத்திற்குப் போ. அங்கே ஒரு ஊழியர் மிகவும் வறுமையில் இருக்கிறார். அவருக்கு ரூ. 500/- கொண்டுப் போய் கொடுத்துவிட்டு வா என்று சொல்லியிருக்கிறார். அவருக்கே மிகுந்த தேவை. இருந்த போதிலும் அந்த ஊழியர் கர்த்தருடைய வார்த் தைக்கு செவிகொடுத்து கர்த்தர் காண்பித்த அந்த ஊழிய ருக்கு ரூ. 500/- கொடுத்துவிட்டு திரும்பும்போதே என்னி டத்திலிருந்து அவருக்கு ரூ. 5,000/- கிடைத்தது. அவர் தன்னுடைய சாட்சியை என்னிடத்தில் பகிர்ந்துக் கொண் டார். நாங்கள் இருவரும் கர்த்தரை ஸ்தோத்தரித்தோம்.

கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்க நம்மில் ஒரு முகாந்தரம் இருக்க வேண்டும். கர்த்தருக்கென்று வாரி இறைக்கும் போது, நாம் எப்போதுமே விருத்தியடைவோம். வேதம் சொல்லுகிறது: வாரி இறைத்து விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய் பிசினித்தனம் பண்ணி வறுமையடை வாரும் உண்டு (நீதி 11:24). கர்த்தருக்குக் கொடுப்பதினால் குறைவுபட்டுப் போகும் என்று பிசினித்தனம் பண்ணினால்

ஒருக்காலும் வறுமையிலிருந்து மீளவே முடியாது. கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும் (நீதி 10:22).

ஒரு முறை ஒரு செல்வந்தன் ஊழியரிடம் ஜெபிக்கச் சென்றார். அவருக்கு வயிற்றில் கொடிய அல்சர் வியாதியிருந்தது. டாக்டர்கள் ஆபரேஷன் செய்தாலும் நீக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள். அடை அடையாக, முத்து முத்து போன்ற கொடிய அல்சர் வியாதி அது! அவரால் ஒன்றும் சாப்பிட முடியவில்லை. ஒன்றும் ஜீரணமும் ஆகாது. குழந்தையைப்போல கொஞ்சம் பால் மாத்திரமே பருக முடியும்.

அந்த மனிதன் தேவ ஊழியரிடம் தன் வியாதி, தன் சரீரத்திலுள்ள பாடுகள், சமாதானக்குறைவுகள் ஆகியவற்றையெல்லாம் மிகுந்த துக்கத்தோடு கூட வர்ணித்து சொன்னார்.

அந்த வார்த்தைகள் தேவ ஊழியரின் உள்ளத்தை உடைத்தது. அவர் கண்ணீரோடு அந்த மனிதனுக்காக தேவ சமுகத்திலே மன்றாட ஆரம்பித்தார். கர்த்தர் சொன்னார்: நான் அவனை மிகவும் ஆசீர்வதித்தேன். அவனுடைய தாழ்மையிலிருந்து அவனை உயர்த்தினேன். ஆனால், அவனோ என்னை நேசிக்கவுமில்லை; என்னுடைய ஊழியத்திற்கென்று அவன் கொடுக்கவுமில்லை; அவன் தசம பாகம் செலுத்தினதுமில்லை. எனக்கு கொடுக்க விருப்பமில்லாத அவன், இப்பொழுது வைத்தியர்களுக்கு வாரி வாரிக் கொடுத்துக் கொண்டிருக்கிறான். ஆனால் எந்த வைத்தியனாலும் அவனைக் குணமாக்க முடியாது என்று பேசினார்.

ஊழியர் அதை அந்த மனிதனிடம் எடுத்துரைத்தபோது, அவன் உடனே, தன்னைத் தாழ்த்தி ஐயா, மன்னியுங்கள். இனி நான் கர்த்தருக்கு தசம பாகம் செலுத்துவேன். இன்றைக்கு நான் அதை பொருத்தனையாக ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று கண்ணீரோடு கூறினான். உடனே, அந்த ஊழியர் அவன் தலையில் கை வைத்து ஜெபித்தார்,

அன்று இரவு கர்த்தர் அற்புத சுகத்தைக் கொடுத்தார். அவருக்கு மிகுந்த பசியெடுத்தது. நன்றாக சாப்பிட்டார்.

அடுத்த நாள் டாக்டரிடத்தில் அவர் போய் பரிசோதித்தப்போது, வயிற்றில் எந்த அல்சர் வியாதியும் இல்லை, என்பதை அவர்கள் ஆச்சரியத்துடன் கண்டு பிடித்தார்கள். அடையடையாய், திரள் திரளாய் இருந்த அந்த அல்சர் முற்றிலும் அவனை விட்டு நீங்கிப் போயிற்று.

நாம் கர்த்தருக்கு கொடுக்கும் போது, கர்த்தர் வீண் செலவுகளையெல்லாம் தவிர்த்து, நமக்கு ஆசீர்வாதத்தைக் கட்டளையிடுகிறார். பழைய ஏற்பாட்டின் காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கென்று மூன்று காரியங்களைக் கொடுக்க வேண்டியவர்களாக இருந்தார்கள்.

1. முதற் பேறு (யாத் 13:2).
2. முதற் பலன் (யாத் 22:29;13:19).
3. தசம பாகம் (எண் 18:21).

இவை மூன்றும் கர்த்தருக்குரியது. ''அது என்னுடையது! அதை செலுத்த தாமதிக்க வேண்டாம்'' என்று கர்த்தர் சொன்னார்.

புதிய ஏற்பாட்டிற்கு வரும்போது, நாம் நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் மூன்றையும் கர்த்தருக்கு அர்ப்பணிக்க வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். முழு இருதயத்தோடும், முழு பெலத்தோடும், முழு மனதோடும் அன்புகூர வேண்டுமென்று விரும்புகிறார். அப்படிக் கேட்பதற்கு அவருக்கு முழு உரிமையுண்டு அல்லவா? அவர் நமக்காக முழுவதையும் அர்ப்பணித்தாரே. தன்னுடைய கடைசிச் சொட்டு இரத்தத்தையும் ஊற்றிக் கொடுத்தாரே. சரீரத்தையெல்லாம் சிலுவையிலே பிட்கும்படி ஒப்புக் கொடுத்தாரே. தம்மை முழுவதுமாக நமக்காக தந்த ஆண்டவருக்காக நாமும் முழுவதுமாக நம்மைக் கொடுக்க வேண்டுமல்லவா?

கர்த்தருக்குக் கொடுப்பது நமக்கு மன மகிழ்ச்சியாய் இருப்பதாக. உற்சாகமாய் இருப்பதாக. நம்மில் அன்பு கூர்ந்து நம்மை பாவங்களறக் கழுவி, நம்மை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினவருக்கு நாம் நம்மை முற்றிலும் அர்ப்பணிப்போமாக!

கர்த்தருக்கு நாம் கொடுக்கும்போது கர்த்தர் நம்முடைய களஞ்சியங்களையெல்லாம் நிரம்பி வழியச் செய்வார். நம்முடைய உள்ளத்தை பரிசுத்தாவியால் நிரப்பி ஆவியின் வரங்களை தந்தருளுவார். அவருடைய இரட்சிப்பில் நாம் என்றென்றும் களிகூருவோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி, உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலி 4:19).

ஆமென்; அல்லேலூயா!

அத்தியாயம் 2

கர்த்தர் கொடுக்கிறார்!

''நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது'' (யாக் 1:17).

கர்த்தர் கொடுக்கிறார்! அளவில்லாமல் கொடுக்கிறார்! நம் மேல் அன்பு வைத்து அவர் கொடுக்கிறார்! நாம் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாய் இராமல் பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி அவர் கொடுக்கிறார்.

நன்மையான ஈவுகளைக் கொடுக்கிறார். பூரணமான வரங்களைக் கொடுக்கிறார். கொடுப்பதில் கர்த்தருக்கு இணை அவர்தான்!

தேவபிள்ளையே, கர்த்தர் உனக்கு கொடுப்பதையெல்லாம் சற்று ஆழமாக நீ சிந்தித்துப் பார்த்தால், உன்னுடைய இருதயம் பூரிப்படையும். நீ அவருக்காக கொடுக்கும்படி உற்சாகப்படுத்தப்படுவாய்.

1. சிருஷ்டிப்பில் கொடுத்தார்:-

தேவபிள்ளையே, கர்த்தர் உனக்கு கொடுத்த சிருஷ்டிப்பை நோக்கிப் பார்! கர்த்தர் இந்த உலகத்தை சிருஷ்டித்தபோது, மனுஷனுக்காக எத்தனை நன்மைகளை கொடுக்கும்படி அவர் தீர்மானித்தார்!

மனுஷனுக்காக ஆகாய விரிவு, மனுஷனுக்காக ஜலம், மனுஷனுக்காக புற் பூண்டுகள், கனி வர்க்கங்கள், மனுஷனுக்காக சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மனுஷனுக்காக நீந்தும் ஜீவஜந்துக்கள், ஆகாய விரிவிலே பறக்கும் பறவைகள், பூமியிலே நடமாடித் திரியும் மிருக ஜீவன்கள் எல்லாவற்றையும் கர்த்தர் கொடுத்தார். மட்டுமல்ல, அவைகள் பலுகிப் பெருகி பூமியை நிரப்பவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அத்தனை ஜீவராசிகளையும் கர்த்தர் நமக்கென்றே கொடுத்தார். அவர் மனுஷனை ஆசீர்வதிக்கும்போது, "நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவன்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்" (ஆதி 1:28). ஆ! தேவனுடைய அளவற்ற அன்பு, எத்தனை மகிமையான காரியங்களை நமக்கு கிருபையாய் அவரிடத்திலிருந்து பெற்றுக் கொடுத்தது!

2. ஆபிரகாமுக்குக் கொடுத்தார்:-

நம்முடைய ஆண்டவர் கொடுக்கிற தேவன். கர்த்தர் ஆபிரகாமை ஆசீர்வதித்தபோது அவர் வலிய வந்து அநேக காரியங்களைக் கொடுத்தார். அவனுக்கு புதிய நாமத்தைக் கொடுத்தார்; புதிய வாக்குத்தத்தங்களைக் கொடுத்தார்; புதிய ஆசீர்வாதத்தைக் கொடுத்தார்; வானத்தின் நட்சத்திரங்களைப்போல அவனுடைய சந்ததியைப் பெருகப் பண்ணுவேன் என்று வாக்கு கொடுத்தார். அவனுக்கு திரளான ஆடுகளையும், மிருக ஜீவன்களையும், எண்ணற்ற வேலைக்காரர்களையும் கொடுத்தார். "உன்னை மிகவும் அதிகமாக பலுகப்பண்ணி உன்னிலே ஜாதிகளை உண்டாக்குவேன்; உன்னிலிருந்து இராஜாக்கள் தோன்றுவார்கள்" என்று சொல்லி ஆசீர்வதித்தார் (ஆதி 17:6).

அந்த ஆசீர்வாதங்களை கர்த்தர் ஆபிரகாமுக்கு மட்டுமல்ல, அவனுடைய சந்ததிக்கும் தலைமுறை தலைமுறையாகவே கொடுக்க சித்தம் கொண்டார். இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து அவர் சொன்னார்: "உனக்கு கொடுப்பேன் என்று கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில், கர்த்தர் உன் கர்ப்பத்தின் கனியிலும், உன் மிருக ஜீவன்களின் பலனிலும், உன் நிலத்தின் கனியிலும் உனக்குப் பரிபூரண நன்மை உண்டாகக் கட்டளையிடுவார்"

(உபா 28:11).

3. குமாரனைக் கொடுத்தார்:-

பிதா, தம்முடைய ஒரேபேறான குமாரனைக்கொடுத்தார். கர்த்தர் மனுமக்களுக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களிலே மிக மிக முக்கியமானது மனுஷனுக்காக தம்முடைய சொந்த குமாரனை கொடுத்ததுதான். வேதம் சொல்கிறது: "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16).

"அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்" (யோவான் 1:14).

தேவபிள்ளையே, தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவாகிய அந்த இயேசுகிறிஸ்துவை நோக்கிப் பார். கிறிஸ்துவை தேவன் உனக்காக கொடுத்ததினிமித்தம், கிறிஸ்துவினிமித்தம் எத்தனை பெரிய, பெரிய, ஆசீர்வாதங்களை அவர் உனக்குக் கொடுத்திருக்கிறார். கிறிஸ்துவிலிருந்து பாவ மன்னிப்பை கொடுத்தார், கிறிஸ்துவின் மூலம் இரட்சிப்பை கொடுத்தார். கிறிஸ்துவின் மூலம் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் கொடுத்தார். கிறிஸ்துவின் மூலம் நித்திய ஜீவனைக் கொடுத்தார். கிறிஸ்துவின் மூலம் சமாதானத்தை, சந்தோஷத்தை, நித்திய மகிழ்ச்சியைக் கொடுத்தார்.

தம்முடைய சொந்த குமாரன் என்றும் பாராமல் சிலுவையிலே அவரை முற்றிலும் நமக்காகத் தந்தருளினார். ஆ! அந்த அன்பை நம்மால் வர்ணிக்க இயலாது!

ஹென்றி மூர்கவுஸ் என்ற ஊழியர் தனது 16 வது வயதில் பிரசங்கிக்க ஆரம்பித்தார். அவரது பிரசங்கத்தின மூல கருத்து "கர்த்தரின் கொடை" என்பதாகும். ஒவ்வொரு பிரசங்கத்திலும் யோவான் 3:16 ஐ மையமாகக் கொண்டு "தமது குமாரனைத் தந்தருளி இவ்வளவாய் அன்பு

கூர்ந்தார்" என்றே பிரசங்கித்தார். அவரது மரணம் வரையிலும் மீண்டும் மீண்டும் அதையே மகிழ்ச்சியோடு பேசிக் கொண்டேயிருந்தார். ஆ! கர்த்தர் நமக்கு கொடுத்தவைகளைப்பற்றி நாம் ஆயுளெல்லாம் களிகூர கடமைப்பட்டிருக்கிறோம்.

4. கிறிஸ்து கொடுத்தார்:-

நமக்கு கொடுப்பதற்காகவே அவர் பரலோகத்திலிருந்து பூமிக்கு இறங்கி வந்தார். வேதம் சொல்கிறது "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" (I கொரி 8:9).

தேவபிள்ளையே, உங்களை பரலோகத்தின் ஐசுவரியங்களினால் தேவன் நிரப்பவேண்டும் என்றே இந்த பூமிக்கு வந்தார். அவரது கிருபையின் ஐசுவரியத்தை உங்களுக்கு கொடுக்கவேண்டும் என்று விரும்புகிறார். அவருடைய மகிமையின் ஐசுவரியம், இரக்கத்தின் ஐசுவரியம், காருண்யங்களின் ஐசுவரியம், அளவிடப்பட முடியாதது. அவ்வளவும் நம்முடையதே! அல்லேலூயா!

பரலோகத்தின் உச்சிதங்களை மட்டுமல்லாமல், தன் முழு வாழ்க்கையையும் இயேசுக்கிறிஸ்து நமக்காகக் கொடுத்தார். தன்னுடைய நேரங்களையெல்லாம் ஏழை மக்களோடே அவர் செலவிட்டார். வேதம் சொல்கிறது: அவர் ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் (மத் 20:28).

அவர் தம்முடைய இரத்தத்தை கொடுத்தார். அந்த இரத்தத்தின் மூலமாக பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு கிடைத்தது. அவர் தம்முடைய சரீரத்தைக் கொடுத்தார். அதை பரலோக மன்னாவாக நாம் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்கிறோம். அவர் கடைசி மூச்சு இருக்கும் பரியந்தமும், அவர் ஊழியம் செய்து கொண்டே வந்தார். அற்புத சுகத்தை கொடுத்தார். விடுதலையைக் கொடுத்தார். ஆசீர்வாதத்தைக் கொடுத்தார்.

இன்றைக்கும் அவர் பிதாவின் வலதுபாரிசத்திலே வீற்றிருக்கிறவராய் உன்னதத்தின் ஆசீர்வாதங்களை நம் மேல் பொழிந்து கொண்டே இருக்கிறார். கொடுத்துக்கொண்டே இருக்கிறார்.

5. பரிசுத்த ஆவியானவர் கொடுக்கிறார்:-

பிதா கொடுத்தவைகளும் உண்டு; குமாரன் மனுக்குலத்திற்கு கொடுத்தவைகளும் உண்டு. அதுபோலவே, ஆவியானவரும் கொடுக்கிறவராகவே இருக்கிறார். ஒவ்வொரு ஆவியின் வரமும், ஆவியின் கனிகளும் அவரிடத்திலிருந்தே இறங்கி வருகிறது. அந்த ஆவியினாலே நாம் வல்லமையை பெற்றுக்கொண்டு சாத்தானின் செயல்களைமுறியடிக்கிறோம்.

I கொரி 12-ம் அதிகாரம் முழுவதையும் வாசித்துப் பாருங்கள். ஆவியானவர் நமக்குத் தருகிற ஆவியின் வரங்களையும், வல்லமையையும் குறித்து அந்த அதிகாரம் போதிக்கிறது. தீர்க்கதரிசன வரங்கள், சுகமளிக்கிற வரங்கள், அற்புதங்கள் செய்கிற வரங்கள், விசுவாசத்தின் வரங்கள், ஒன்பது என்னப்பட்ட ஒன்பது வகையான வரங்களை வாசித்து நாம் பூரிப்படைகிறோம். தேவன் அந்த வரங்களையெல்லாம் நமக்காகவே கொடுத்திருக்கிறார் (எபே 4:7-12).

6. அன்பைக் கொடுத்தார்:-

வேதத்தின் ஒவ்வொரு பக்கங்களும் நமக்குதேவனுடைய அன்பையே வெளிப்படுத்துகிறது. அனாதையாய் பூமியிலே அலைந்த நம்மை அரவணைத்துக்கொண்டு உங்களை திக்கற்றவர்களாய் விடேன் என்று சொல்லி அவர் அன்பை கொடுத்தார். பாசத்தை பொழிந்தருளினார். நீங்கள் என்னுடையவர்கள்; நீங்கள் என்னுடைய ஜனம்; நீங்களே என்னுடைய சம்பத்தாய் இருப்பீர்கள் என்றெல்லாம் அவர் சொல்லி ஆற்றித் தேற்றினார்.

உலகம் அன்புக்காக ஏங்கி தவித்துக்கொண்டிருக்கும் போது, கர்த்தர் உலகம் கொடுக்காத அன்பை நமக்குக் கொடுக்க சித்தமானார். அப்படியே அன்பு வைத்து கொடுத்த

ஈவுகளில் ஒன்றுதான் பரிசுத்த வேதாகமம். அந்த அன்பின் ஈவு நம்மை தலை நிமிர்ந்து நடக்கச் செய்கிறது. அந்த அன்பின் ஈவு நம்மை வழி நடத்துகிறது. தேவபிள்ளையே, தேவன் கொடுத்த அந்த பெரிய அன்பை சற்று தியானித்துப் பார்த்து உன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியோடே தேவனை ஸ்தோத்தரிப்பாயா?

7. **சிருஷ்டிப்பு கொடுக்கிறது:-**

கர்த்தர் மட்டுமல்ல, கர்த்தர் சிருஷ்டித்த எல்லா சிருஷ்டிகளுமே மனுஷனுக்கென்று கொடுத்துக் கொண்டே இருக்கிறது. சற்று சிந்தித்துப் பாருங்கள்.

கர்த்தர் சூரியனை சிருஷ்டித்தார். சூரியன் இடைவிடாமல் வெளிச்சத்தைக் கொடுக்கிறது. வெப்பத்தைக் கொடுக்கிறது. தாவரங்கள் வாழ்வதற்கு உதவி செய்கிறது. அது கொடுத்துக்கொண்டே இருக்கிறது!

கர்த்தர் சந்திரனை சிருஷ்டித்தார். அதற்கு இயற்கையாக ஒளி இல்லாவிட்டாலும் கூட, அது உலகத்திற்கும், மனுஷனுக்கும் ஏதாவது கொடுக்கவேண்டும் என்று விரும்பி சூரியனிடமிருந்து வெளிச்சத்தை வாங்கி, இரவு நேரத்தில் மென்மையாக ஒளி வீசுகிறது. பால் போன்ற வெளிச்சத்தில் நாம் சந்தோஷமாய் களிகூருகிறோம்.

கர்த்தர் நட்சத்திரங்களை சிருஷ்டித்தார். அவைகளும் இருளில் அழகழகாக பிரகாசமாக மின்னுகின்றன. பாதை தெரியாமல் திகைக்கும் கப்பலோட்டிக்கு பாதையைக் காட்டுகின்றன. இரவும் பகலும் ஒளியைக் கொடுத்துக்கொண்டே இருக்கின்றன.

கர்த்தர் காற்றை சிருஷ்டித்தார். அது குளுமையாக வீசி நம்முடைய இருதயத்தை மகிழ்விக்கிறது. காற்று அலைகளை இயக்குகின்றன. காற்று மழை மேகங்களை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு சுமந்துகொண்டு வருகிறது. ஆம் அதுவும் கொடுத்துக் கொண்டேயிருக்கிறது!

கர்த்தர் மேகங்களை சிருஷ்டித்தார். மேகங்கள் அருமையான மந்தாரத்தையும், நிழலையும் தருகின்றன. கரும் மேகங்கள் மழையைத் தருகிறது. அதுவும் கொடுத்துக்கொண்டே இருக்கிறது.

கர்த்தர் கடலை சிருஷ்டித்தார். அது உப்பை தருகிறது. ஆயிரம் ஆயிரமான மீன்களை மனுஷனுக்கு தருகிறது. முத்துக்களைக் கொடுக்கிறது. அது கொடுத்துக்கொண்டே இருக்கிறது.

கர்த்தர் மரம், செடி, கொடிகளை சிருஷ்டித்தார். அவைகள் நிழலை கொடுக்கின்றன. சுவைமிக்க காய் கறிகளைக் கொடுக்கிறது. பழங்களையும், கனிவர்க்கங்களையும் கொடுத்துக் கொண்டே இருக்கிறது!

கர்த்தர் மலர்களை சிருஷ்டித்தார். மலர்கள் மனதுக்கு மகிழ்ச்சியைக் கொண்டு வருகின்றன. மலர்களின் நிறம் கண்களைக் கவர்கிறது. மலர்கள் வாசனையைக் கொடுக்கின்றன. வண்டினங்களுக்கு அந்த மலர்கள் தேனையும் தருகின்றன.

கர்த்தர் மிருகங்களை சிருஷ்டித்தார். மிருகங்கள் உழைப்பைக் கொடுக்கின்றன. பசு பாலைக் கொடுக்கிறது; ஆடுகள் கம்பளியைக் கொடுக்கின்றன; ஒட்டகங்கள் வாகனமாக பயன்படுகின்றன. அநேக மிருகங்கள் மனுஷனுக்கு இறைச்சியாகத் தங்களையே கொடுக்கின்றன.

மரம், செடி, கொடிகள் எல்லாம் மனுஷுக்கு கொடுக்கின்றன. பறவைகள் எல்லாம் மனுஷனுக்கு உபயோகமாக இருக்கின்றன. கர்த்தர் சிருஷ்டித்த ஒவ்வொன்றும் கொடுத்துக் கொண்டே இருக்கிறது.

தேவபிள்ளையே, சற்று சிந்தித்துப் பார்? நீ கொடுக்கிறாயா? கர்த்தருக்குக் கொடுக்கிறாயா? உன்னதமான ஊழியத்திற்குக் கொடுக்கிறாயா? ஏழைகளுக்கு பரதேசிகளுக்கு திக்கற்றவர்களுக்குக் கொடுக்கிறாயா?

அத்தியாயம் 3

என்ன கொடுக்க வேண்டும்?

''இந்த பாக்கியம் தந்த இயேசுவுக்கு
பதில் நான் என்ன கொடுக்க வேண்டும்?
என் பூரண சக்தியோடு அவர் நாமத்தை
என்றும் வாழ்த்தி புகழ்ந்திடுவேன்".

தாவீது ராஜா கர்த்தர் தனக்கு செய்த எல்லா நன்மைகளையும் நினைத்து, தியானித்து உள்ளத்திலே நன்றியும் ஸ்தோத்திரமும் பொங்க, ''கர்த்தர் எனக்கு செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு என்னத்தை செலுத்துவேன்? இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுவேன்" என்றார் (சங் 116:12). ஆம், உண்மையாகவே கர்த்தர் நமக்கு செய்த எல்லா உபகாரங்களையும் நினைக்கும் போது நாம் அவருக்கு கைமாறு செய்யக் கூடியகாரியம் ஒன்றும் இல்லை.

விந்தை கிறிஸ்து இயேசு ராஜா, உந்தன் சிலுவை என் மேன்மை, என் மேன்மை என்ற பாடலை தியானத்தோடு பாடும்போதெல்லாம் கண்களில் கண்ணீர் வராமல் இருப்பதில்லை. அந்த அருமையான கீர்த்தனையில் ஒரு சரணம் உண்டு.

''இந்த விந்தை அன்புக்கீடாய்,
என்ன காணிக்கை ஈந்திடுவேன்?
எந்த அரும்பொருள் ஈடாகும்?
என்னை முற்றிலும் உமக்களிக்கிறேன்''

எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் லத்தின் மொழியில் வேதாகமத்தை மொழிபெயர்த்த பக்தனாகிய ஜெரோம், ஒருநாள் கிறிஸ்துவினுடைய அன்பைக்குறித்து தியானித்துக் கொண்டே இருந்தார். அப்பொழுது திடீரென்று தூரத்திலிருந்து கிறிஸ்து ஒரு பாலகனாக அவரை நோக்கி நடந்து வருகிறதைக் கண்டார். அந்த பக்தனின் உள்ளமெல்லாம் பரவ

சம் அடைந்தது. "என் அருமை இயேசு பாலகா, என் முழு இருதயத்தோடு கூட வேறு காணிக்கையும் உமக்கு கொடுக்க விரும்புகிறேன். உமக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டாராம். இயேசு அதற்கு, "எல்லாம் என்னிடத்தில் இருக்கிறது. வானமும் பூமியும் என்னுடையது. வெள்ளியும் பொன்னும் என்னுடையது. சகல பறவை, மிருக ஜீவராசிகள் அனைத்தும் என்னுடையது. எனக்கு ஒன்றும் வேண்டாம்" என்றார்.

ஆனால் அந்த பக்தனுக்கோ இயேசுவை வெறும் கையாக அனுப்ப பிரியம் இல்லை. நான் உம்மை அதிகமாய் நேசிக்கிறேன். என் அன்பை உமக்கு வெளிப்படுத்தும்படி ஏதாவது என்கையில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று மன்றாடினார்.

பாலகனை இயேசு அவரை கூர்ந்து பார்த்தார். நீ என்னை நேசித்தால் உன் பாவங்களை எனக்குத் தா. உன் சிந்தனைகளை, உன் மீறுதல்களை எனக்குத் தா. அருவருப்பான உதட்டின் பாவங்கள் எல்லாவற்றையும் எனக்குத்தா. நான் அவைகளை சிலுவையிலே சுமக்கட்டும். என் இரத்தத்தை சிந்தி உனக்காக மரிக்கட்டும் என்றாராம்.

இந்த வார்த்தைகள் ஜெரோமின் உள்ளத்தை உடைத்தது. அவர் கதறி கதறி அழுதார். தான் கிறிஸ்துவுக்கு கொடுக்கும் பரிசு எத்தகையது என்று உணர்ந்த போது அவரது கண்ணீரை அடக்க முடியாமல் போயிற்று.

தேவபிள்ளையே, நீ கர்த்தருக்கு ஏதாவது கொடுக்க விரும்பினால் அதைக் கொடுப்பதற்கு முன்பு, முதலாவது உன்னை பரிபூரணமாய் கர்த்தரிடத்தில் அர்ப்பணித்து விடு. கர்த்தருக்கு விருப்பமில்லாத காரியங்கள், அசுத்தமான ஜீவியங்கள், பாவ வழிகள், துன்மார்க்கமான சிந்தனைகள், எல்லாவற்றையும் உதறிவிட்டு அவருடைய இரத்தத்தால் கழுவப்படு. சுத்திகரிக்கப்பட்ட இருதயத்தோடு நீ கர்த்தருக்கு கொடுக்கும் காணிக்கையில்தான் அவர் அகமகிழ்வார், சந்தோஷப்படுவார்.

இந்த அத்தியாயத்திலே நாம் கர்த்தருக்கு எவைகளை யெல்லாம் கொடுக்க வேண்டும் என்பதைக் குறித்து சற்று தியானிப்போமா?

1. ஆவி, ஆத்துமா, சரீரம்:-

நம் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் கர்த்தருடையது. அவரே நம்மை சிருஷ்டித்தவர். அவருடைய வல்லமையுள்ள கரங்களே நம்மை வனைந்தது. தாயின் வயிற்றிலே நம்மை உருவாக்கினவர் அவர்தான். நாம் நம்மை முற்றிலும் கர்த்தருடைய கரத்தில் கொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார்: ''அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்'' (ரோ 12:1).

''நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள்" (ரோ 6:13).

மக்கெதோனியா சபையாரைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் எழுதும் போது, ''நாங்கள் நினைத்தபடி மாத்திரம் கொடாமல், தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத் தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்" (II கொரி 8;5) என்று குறிப்பிடுகிறார்.

நாம் முற்றிலும் கர்த்தருக்கு சொந்தமானவர்கள். ''நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும், மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்" (ரோ 14:8).

ஒருமுறை ஒரல் ராபர்ட்ஸ் பிரசங்கிக்கும்போது ஒரு வார்த்தையை திரும்பத் திரும்ப சொன்னார். அது ஒரு

விசுவாச அறிக்கை. ''நான் கர்த்தருக்கு சொந்தமானவன்; நான் கர்த்தரின் சொத்து. சாத்தானே, உன் கரங்களை தேவனுடைய பிள்ளையாகிய என்மேல் வைக்க முடியாது'' என்று நீங்கள் சத்துருவைப் பார்த்து மீண்டும் மீண்டும் விசுவாசத்தோடு சொல்லும்போது அவன் ஓடிப்போவான் என்று பிரசங்கித்தார்.

இந்த பிரசங்கத்தை ஒரு சகோதரி கேட்டாள் அவள் ஒரு நாள் ஒரு இருண்ட பாதை வழியாக நடந்து வந்து கொண்டிருந்த போது திடீரென்று ஒருவன் வேகமாக அவள் முன் வந்து. ஒரு கூர்மையான கத்தியை அவள் தொண்டைக்கு அருகில் நீட்டி, நீ என் ஆசை இச்சைகளுக்கு இணங்காவிட்டால் உன்னை கொலை செய்து விடுவேன் என்று பயமுறுத்தினன். இவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அந்த பிரசங்கம் உடனே அவள் ஞாபகத்திற்கு வந்தது. ''சாத்தானே, நான் கர்த்தரின் சொத்து; உன் கையை என்மேல் நீட்ட முடியாது. நான் கர்த்தரின் சொத்து; என்னை கர்த்தருக்கென்று கொடுத்திருக்கிறேன் என்று மீண்டும் மீண்டும் உறுதியோடு சொல்லிக்கொண்டிருந்தாள்.

இந்த வார்த்தைகள் அவன் உள்ளத்தை வல்லமையாய் தாக்கினது. பிரமைபிடித்தவனைப் போல நடுங்கி அப்படியே நின்றுவிட்டான். அப்பொழுது மூன்றுபேர் எங்கிருந்தோ தோன்றி அங்கு வந்தார்கள். அவனைப் பிடித்து போலீஸில் ஒப்படைத்தார்கள்.

''நீயுனக்குச் சொந்தமல்லவே!'' என்று பக்தன் பாடுகிறன். ஆம், நாம் கர்த்தரின் சொத்து. நம்மை பரிபூரணமாக கர்த்தருக்கென்று கொடுப்போமாக. அப்பொழுது கர்த்தர் நமது ஆவி, ஆத்துமா, சரீரத்தை நித்தியம் நித்தியகாக காத்துக்கொள்வார்.

2. தாலந்துகளை கர்த்தருக்குக் கொடுங்கள்:-

கர்த்தர் உங்களுக்குக் கொடுத்திருக்கிற ஒவ்வொரு தாலந்துகளையும் கர்த்தருடைய நாமத்தின் மகிமைக்காக பயன்படட்டும். உங்களுடைய தாலந்துகளையெல்லாம் கர்த்தருடைய ஊழியத்திற்கென்று பயன்படுத்துங்கள்.

ஒருவேளை நீ இனிமையாக பாடுகிறவனாய் இருந்தால் உன்னுடைய குரலாகிய தாலந்தை கர்த்தருக்கு கொடு. நீ மிக மனதுருக்கமாய் கிறிஸ்துவினுடைய அன்பைக் குறித்து பாடும்போது அந்த பாடலின் மூலமாக அநேகர் கர்த்த ரண்டை இழுக்கப்பட்டு தேவனை கண்டுகொள்வார்களே!

ஒருவேளை உனக்கு பிரசங்கிக்கக் கூடிய தாலந்து இருக் கலாம். சாமர்த்தியமான பேச்சுத் திறமை இருக்கலாம். அந்த தாலந்தை கர்த்தருக்கென்று கொடு. அறுப்பு மிகுதி, வேலையாட்கள் இல்லை. ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள். உன் தாலந்துகள் கர்த்தருக்கு பயன்பட்டால் அவர் எவ் வளவு மகிழ்ச்சியாய் இருப்பார்.

உனக்கு ஜெப ஆவியும், விண்ணப்பத்தின் ஆவியும் இருந்தால் அதை கர்த்தருக்கென்று அர்ப்பணி. உன் ஜெபம் அநேக தேவ ஊழியர்களை தாங்கட்டும்! துயரமுள்ளவர்களை ஆற்றித் தேற்றட்டும்.

எனக்கு எழுதும் தாலந்து இருக்கிறது என்பது எனக்கே தெரியாமல் இருந்தது. கர்த்தர் அதை எனக்கு உணர்த் தினார். கல்வாரி அன்பைக் குறித்து நீ எழுதமாட்டாயா? என்று கர்த்தர் என் உள்ளத்தின் ஆழத்தில் பேசினபோது, என்னுடைய பேனாவைத் திறந்து கல்வாரிக்கு நேராக உயர்த்திக் கொடுத்தேன். "ஆண்டவரே, உம்முடைய இரத்தத்தை இதில் நிரப்பித்தாரும். உம்முடைய வல்ல மையை, உம்முடைய மேன்மையை, உம்முடைய மகிமையை நான் எழுதட்டும்" என்று நான் வேண்டிக்கொண்டபோது கர்த்தர் என்னை தம்முடைய ஞானத்தினால் நிரப்பினார். இன்று நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்கள் எழுதும்படி, தேவன் எனக்கு உதவி செய்தார். அல்லேலூயா!

தேவபிள்ளையே, கர்த்தர் உனக்குக் கொடுத்திருக்கும் தாலந்து என்ன? ஒரு தாலந்தும் இல்லை என்று சொல்லி விடாதே. தாலந்து இல்லாமல் கர்த்தர் ஒருவரையும் சிருஷ்டிப்பதில்லை. இரட்சிக்கும்போது கர்த்தர் சில தாலந்து

களைக் கொடுப்பார். அபிஷேகிக்கும்போது சில தாலந்து களைக் கொடுப்பார். கர்த்தர் கொடுத்த தாலந்துகள் எதுவாய் இருந்தாலும் அதை கர்த்தருக்கென்று அர்ப்பணிப்பாயா?

கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைக்காக இஸ்ரவேல் ஜனங்கள் காணிக்கைகளைக் கொண்டு வந்தார்கள். மட்டுமல்ல, தங்கள் பொன்னையும், வெள்ளியையும் கூட கர்த்தருக்கென்று பிரதிஷ்டை செய்தார்கள். அதனால் அவர்கள் ஞானமடைந்து அந்த வேலையைச் செய்யும்படி எழுப்புதல் அடைந்தார்கள் (யாத் 36:5). அவர்கள் தாலந்துகளை கர்த்தருக்கென்று கொடுத்தபடியினாலே பரிசுத்த ஆவியானவர் அவர்களை ஞானத்தில் நிரப்பி அவர்களை வல்லமையாய் பயன்படுத்தினார்.

தேவபிள்ளையே, உன் தாலந்துகளை கர்த்தருக்கென்று கொடுத்து பிரதிஷ்டை செய். ஐந்து அப்பமும் இரண்டு மீன்களானாலும் சரி; அல்லது வறுமையின் தாழ்ச்சியிலுள்ள இரண்டு காசுகளானாலும் சரி; அல்லது சிறிய சாமுவேலானாலும் சரி. நீ கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுத்து பிரதிஸ்டை செய்யும்போது உன் தேவன் விசேஷித்த ஞானத்தால் உன்னையும் உன் தாலந்துகளையும் ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பார்.

3. இடத்தை கொடு: -

அன்றைக்கு சத்திரக்காரனுக்கு இடம் கொடுக்க பிரியம் இல்லை. சத்திரத்தில் இடம் இல்லை என்று மரியாளுக்கு அவன் சொல்லிவிட்டான். சத்திரத்தில் சட்டி பானைக்கு இடம் இருந்தது. ஆடு மாடுகளுக்கு இடம் இருந்தது. இன்னும் பல தட்டுமுட்டு பொருட்களுக்கும் ஜாமான்களுக்கும் இடம் இருந்தது. ஆனால் கர்த்தருக்கோ இடம் இல்லை.

தேவபிள்ளையே, உன்னுடைய வீட்டில் கர்த்தருக்கு இடம் உண்டா? யோசேப்பின் வீடு சிறிய வீடுதான். ஏழை தச்சனின் வீடுதான்! என்றாலும் இயேசு அங்கே வளர மனப்

பூர்வமாய் அவன் இடம் கொடுத்தான். சற்று சிந்தித்துப் பார். உன்னுடைய வீட்டில் அவருக்கு இடம் உண்டா? உங்கள் வீட்டில் ஜெபக்கூட்டங்கள் நடத்துவது உண்டா? உங்கள் வீட்டின் மூலம் சுவிசேஷம் பரப்புவதற்கு வழி உண்டா? எரேமியா லான்பர் என்பவருடைய சாட்சியைக் குறித்து கேள்விப்பட்டேன். அவர் கர்த்தர்மேல் அன்போடு கூட தன் வீட்டில் ஒரு ஜெபக்கூட்டத்தை ஆரம்பித்தார். இரண்டு மூன்றுபேர் அதில் வந்து கலந்துகொண்டார்கள். பின்பு அவர் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று ஆட்களை வருந்தி அழைத்து வீட்டிற்கு கொண்டு வந்தார். அதன் பின்பு ஆறுபேர் அந்த கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். அவர் மனம் சோர்ந்து போகவில்லை. வீட்டு கூட்டத்தை குறித்து மிக நல்லமுறையில் விளம்பரம் செய்தார். மிகவும் ஊக்கமாக ஜெபித்தார். அடுத்த வாரம் நாற்பதுபேர் வந்தார்கள். அதற்கடுத்த வாரம் அறுபதுபேர் வந்தார்கள். வந்த மக்கள் எல்லாம் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அதைத் தொடர்ந்து அந்த பட்டணத்தில் கிறிஸ்தவ வீடுகள்தோறும் ஆவிக்குரிய கூட்டங்கள் நடந்தன. அதன் விளைவாக அந்த பட்டணத்தில் ஒரு பெரிய எழுப்புதல் உண்டானது.

தேவபிள்ளையே, கர்த்தருக்கு கொடுக்க உன் உள்ளத்தில் விருப்பம் உண்டா? வீட்டில் இடம் உண்டா? வாசற்படியிலே நின்று தட்டுகிற கர்த்தருக்கு உன்னுடைய வீட்டை திறந்து கொடுப்பாயா?

4. நேரத்தை கொடு:-

பணத்தில் தசமபாகத்தைக் குறித்து ஒருவேளை நீங்கள் அதிகமான பிரசங்கங்கள் கேட்டிருக்கலாம். ஆனால், நீங்கள் நேரத்தில் தசமபாகம் கொடுத்திருக்கிறீர்களா? சற்று சிந்தித்துப் பாருங்கள்.

தேவபிள்ளையே, ஒரு நாளைக்கு இருபத்திநான்கு மணி நேரங்கள் உண்டு. நேரத்தில் நீ தசம பாகம் செலுத்த வேண்டும் என்றால் தினமும் இரண்டு மணி நேரமும், இருபத்தி நான்கு நிமிடங்களும் கர்த்தருக்குச் செலுத்த

வேண்டும். இந்த நேரத்தை ஜெபத்திலும் வேதவாசிப்பிலும் செலவழித்தால் நீ எவ்வளவு பாக்கியவானாய் இருப்பாய்! நேரத்தில் தசம பாகம் செலுத்தி அந்த நேரத்தில் திறப்பின் வாசலிலே நின்று தேசத்திற்காகவும் அழிந்து போகிற மக்களுக்காகவும் ஊக்கமாக ஜெபிக்கமாட்டாயா?

உன்னுடைய நேரத்தை கர்த்தருக்கென்று கொடு. அதிகாலை வேளையிலே அருமையான நேரத்தை கர்த்தருக்கென்று ஒதுக்கு. ஒவ்வொரு நாளிலும் முதல் பாகம் கர்த்தரோடு செலவழிக்கிற ஜெபவேளையின் நேரமாய் இருக்கட்டும்!

ஆதி அப்போஸ்தலர்கள் தங்களுடைய நேரங்களை கர்த்தருக்கென்று கொடுத்தார்கள். "நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்" என்றார்கள் (அப் 6:4).

5. **வேதத்தை வாசிப்பதற்கு நேரத்தை கொடுங்கள்:-**

அநேகருக்கு வேதம் வாசிக்க நேரம் இல்லை. வேதத்தின் மகத்துவங்களை அறிந்துகொள்ள நேரம் இல்லை. வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக்கொள்ள நேரம் இல்லை. தங்க வசன காலண்டரில் ஒரு வசனம் வாசித்து திருப்தியடைந்து விடுகிறார்கள்! வேத வசனத்துக்கு நேரம் கொடுக்காதபடியினால், அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியம் தோல்வியிலே முடிவடைந்திருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது "நான் வருமளவும் வாசிக்கிறதிலும் புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு. நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக் கொண்டு, இவைகளிலே நிலைத்திரு" (I தீமோ 4:13,15) என்று திட்டமாய் எழுதுகிறார்.

ஆம், உண்மையிலேயே வேத வாக்கியங்களுக்கு முக்கியத்துவமும், முதலிடமும் கொடுக்கும்போது அது நமக்கு மிகுந்த ஆசீர்வாதமானதாக இருக்கும்.

பிரிட்டீஷார். வேதத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். அநேக மிஷனரி சங்கங்களை ஏற்படுத்தினார்கள். விக்டோரியா மகாராணி இங்கிலாந்தை ஆண்டபோது வேதத்தை அவர்கள் அவ்வளவாய் கௌரவித்து. அதற்கென்று நேரத்தை கொடுத்தபடியினால் கர்த்தர் அந்த தேசத்தை அளவில்லாமல் ஆசீர்வதித்தார்.

அவர்கள் வேதத்தை உயர்த்திக் காட்டி, ''இங்கிலாந்தின் முன்னேற்றத்திற்கும் மகிமைக்கும் இந்த வேத புத்தகமே காரணம்'' என்று மகிழ்ச்சியோடு கூறினார்கள்.

தேவபிள்ளையே, வேதத்தை திரும்பத் திரும்ப வாசி. முதல் பாகத்திலிருந்து கடைசி பாகம் வரையிலும் வாசித்துக் கொண்டே இரு. நிறுத்திவிடாதே. அப்போது கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார். நீ எப்போதும் மேன்மையடைவாய்!

6. உனக்கு உண்டானவைகளைக் கொடு:-

அநேகருக்கு கர்த்தருக்கு கொடுக்கவேண்டும் என்று விருப்பம். ஆனால் தங்களிடத்தில் கர்த்தருக்கு கொடுக்காமல் மற்றவர்களிடத்திலிருந்து அபகரித்து கொடுக்க விருப்பப்படுகிறார்கள். நீ கொள்ளையடித்து கொடுக்கும் காணிக்கையை கர்த்தர் விரும்புகிறதும் அல்ல. அது அவருக்கு அருவருப்பானது.

அரசாங்கத்தில் முக்கியமான பதவியில் இருந்த ஒருவர் ஒருநாள் எண்ணினார். ''நான் கொடுக்கும் காணிக்கை கர்த்தருக்கு போதாது. நான் இன்னும் அதிகமாக கர்த்தருக்கென்று கொடுக்க விருப்பப்படுகிறேன். ஆகவே நான் ஏராளம் லஞ்சம் வாங்கி அத்தனை லஞ்சத்தையும் கர்த்தருடைய ஊழியத்திற்கு கொடுப்பேன், ஏழைகளுக்கு அன்னதானம் பண்ணுவேன்'' என்று யோசித்தார். அவருடைய சிந்தனையில் அது சரியாகவே பட்டது. முதல் நாள் அவருக்கு கிடைத்ததை, அன்பளிப்பை அப்படியே பத்திரமாய் வைத்து இதை நான் செலவழிக்கமாட்டேன். இதை கர்த்தருக்

கென்று கொடுப்பேன் என்று பெட்டியில் பாதுகாப்பாக வைத்திருந்தார். அன்று இரவில் கர்த்தருடைய சத்தம் கேட்டது. ''உனக்கு உண்டானவைகளை விற்று கர்த்தருக்கு கொடு" (மத் 19:21) என்பதே அந்த சத்தம். அந்த சத்தத்தைக் கேட்ட அவர் மிகவும் உணர்த்தப்பட்டார். கர்த்தர் பேசினார்: எனக்கு அதிகமான தொகை வேண்டுமென்பது அல்ல. நான் உள்ளத்தை பார்க்கிறவர். நீ மனப்பூர்வமாய் எனக்கென்று கொஞ்சம் கொடுத்தாலும் அதில் நான் மகிழ்ச்சியாய் இருப்பேனே தவிர பிறர் பொருளை எடுத்து எனக்கு செலவழிப்பதில் நான் விரும்புவது இல்லை என்றார்.

தேவபிள்ளையே, நீ மோசடி பண்ணி, ஏமாற்றி,லாட்டரி டிக்கட் வாங்கி கர்த்தருக்குக் கொடுத்தால் அதில் அவருக்கு என்ன மகிழ்ச்சி உண்டு? உனக்குள்ளதை இரண்டு காசுகளையானாலும் கூட அவர் அதிலே மனம் மகிழுகிறார். ஒருநாளும் கடை தேங்காயை எடுத்து வழியில் போட்டு உடைக்காதே. அதில் யாருக்கும் எந்த பிரயோஜனமும் இல்லை!

7. ஸ்தோத்திரத்தை கர்த்தருக்கென்று கொடு:-

நாம் கர்த்தருக்கென்று கொடுக்கிற மிக அருமையான காணிக்கை ஸ்தோத்திரம்தான். நன்றியுடைய இருதயத்திலிருந்து வெளிப்படும் மகிழ்ச்சியான ஸ்தோத்திரம்; உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரம்; கர்த்தரை துதிக்கும் துதியாகிய ஸ்தோத்திரம்; கர்த்தர் அதை மகிழ்ச்சியோடு அங்கீகரிப்பார்.

பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர் தூபவர்க்கத்தின் புகையை தேவசமுகத்தில் ஏறெடுப்பார்கள். அந்த சுகந்த வாசனை கர்த்தருடைய இருதயத்தை மகிழ்விக்கும், புதிய ஏற்பாட்டில் அந்த சாம்பிராணியாகிய தூபவர்க்கம் துதிக்கும், ஸ்தோத்திரத்துக்கும் நிழலாட்டமாய். இருக்கிறது. நாம் துதிக்கும்போது கர்த்தர் அதை, சுகந்த வாசனையுள்ள பலியாக ஏற்று அங்கீகரித்து ஆசீர்வதிப்பார்.

அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார்: ''எல்லாவற்றிலும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது'' (I தெச 5:18).

''ஆகையால் அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்''

(எபி 13:15).

தேவபிள்ளையே, நம்முடைய தேவன் அன்புள்ள தேவன். மாத்திரமல்ல, அன்பை எதிர்பார்க்கிற தேவனும் கூட. நீ அவரை துதிக்கமாட்டாயா, ஸ்தோத்தரிக்கமாட்டாயா என்று ஆவலோடு எதிர்பார்க்கிறார். நீ அவருக்குக் கொடுக்கும் மிகச்சிறந்த பரிசு உன்னுடைய உள்ளத்திலிருந்து நன்றியோடு மகிழ்ச்சியோடு அவருக்குக் கொடுக்கும் ஸ்தோத்திரமும் துதியும்தான் துதிப்பாயா? கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக!

அத்தியாயம் 4

யாருக்கு கொடுக்க வேண்டும்?

யாருக்கு கொடுக்க வேண்டும்? என்று அநேகருக்கு ஒரு பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது. பல வேளைகளில் பலர் வந்து, நீங்கள் எங்களுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள்; கட்டாயப்படுத்துகிறார்கள். நாங்கள் தான் உண்மையாக அங்கீகரிக்கப்பட்டவர்கள், எங்களுக்கு நீங்கள் கொடுத்தால் தான் கர்த்தரிடத்திடத்தில் போய் சேரும் என்றெல்லாம் வாதமிடுகிறார்கள்.

இன்னும் சிலர் இந்த ஹோட்டலில் நீ சாப்பிட்டுவிட்டு அடுத்த ஹோட்டலில் போய் பில் கொடுப்பாயா என்று கிறிஸ்தவ மார்க்கத்தை கேவலமான ஹோட்டல் தொழிலுக்கு ஒப்புவமையாக்கிப் பேசுகிறார்கள். இது எத்தனை பரிதாபமானது! நாம் யார் யாருக்கு கொடுக்கவேண்டும் என்பதை சற்று சிந்திப்போமா?

1. கர்த்தருடைய ஊழியங்களுக்கு:-

''என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்'' (மல்கியா 3:10).

பழைய ஏற்பாட்டில் ஒரே ஒரு ஆலயம் மாத்திரமே இருந்தது. அது எருசலேமில் இருந்தது. ஜனங்கள் அந்த எருசலேமிலுள்ள ஆலயத்திற்கு விளைவின் முதற்பலனை கொண்டு வருவார்கள். தலையீற்றுக்களிலே சிறந்ததைக் கொண்டு வருவார்கள். மெல்லிய மாவை கொண்டு வருவார்கள். அவைகள் அங்குள்ள பண்டசாலையிலே இடம்பெறும்.

அந்த பண்டசாலையிலுள்ளதை ஆலயத்தில் பணிபுரிகிற ஐந்து வகையான ஊழியர்கள் பகிர்ந்து கொள்வார்கள். வாசற்காப்பவர்கள், ஆலயத்தை சுத்தம் செய்கிறவர்கள், லேவியர்கள், ஆசாரியர்கள் போன்ற பலவகையான ஆலய பராமரிப்பாளர்கள் அவற்றை பகிர்ந்து கொள்ளுவார்கள்.

புதிய ஏற்பாட்டில் கைகளினால் கட்டப்பட்ட ஆலயத்தில் கர்த்தர் வாசமாய் இருப்பதில்லை. நீங்களே அந்த ஆலயம் என்று கர்த்தர் சொன்னார் (I கொரி 3:16). ஆலயத்தில் இருக்க வேண்டிய ஆகாரம் என்ன? அது தேவனுடைய வார்த்தையாகிய வசனம் தான் (மத் 4:4).

ஆகாரம் இல்லாமல் பட்டினியால் வாடும் ஆலயமாகிய ஜனங்களுக்கு ஆகாரமாகிய சுவிசேஷத்தை கொண்டு செல்வது தான் சுவிசேஷ ஊழியம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்த நோக்கமும் அதுதான். அவர் கிராமம் தோறும், பட்டணந்தோறும் அலைந்து திரிந்து சுவிசேஷ வேலை செய்தார். அவருடைய சீஷர்கள் சுவிசேஷ வேலையை செய்தார்கள். பவுல் அப்போஸ்தலன் பல தேசங்களுக்கு பிரயாணம் செய்து சுவிசேஷத்தை அறிவித்தார். சுவிசேஷத்துக்கென்று கொடுக்கப்படுகிற தசமபாகங்களை கர்த்தர் ஆசீர்வதிந்து அங்கீகரித்து நிச்சயமாகவே மேன்மைப் படுத்துவார்.

புதிய ஏற்பாட்டில் கர்த்தர் ஐந்து வகையான ஊழியர்களை வைத்திருக்கிறார். அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், மேய்ப்பர்கள், போதகர்கள், சுவிசேஷகர்கள். இவர்கள் யாவரும் கர்த்தருடைய ஊழியத்தை செய்து வருகிறார்கள். நாம் எந்த ஊழியக்காரருக்குக் கொடுத்தாலும், கர்த்தருடைய கையில் கொடுப்பதைப் போல எண்ணி விசுவாசித்து கொடுக்கும் போது அது நிச்சயமாகவே நமக்கு ஆசீர்வாதமாய் இருக்கும். ஒரு மனுஷருக்கோ அல்லது தேவனுடைய ஊழியக்காரருக்கோ கொடுப்பதாக எண்ணாமல் கர்த்தருடைய காயப்பட்ட கரங்களில் கொடுப்பதாக, பரலோகத்தில் பெயரெழுதப்பட்டிருக்கிற சர்வ சங்கமாகிய சபைக்கு கொடுப்பதாக, தேவனுடைய சுவிசேஷ ஊழியத்துக்கு கொடுப்பதாக எண்ணி கொடுக்கும்போது நிச்சயமாகவே கர்த்தர் வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமற் போகும் மட்டும் உங்களை ஆசீர்வதிப்பார்.

2. உங்களுக்காக ஜெபிப்பவர்களுக்கு:-

உங்களுக்காக பாரமெடுத்து ஜெபிப்பவர்களுக்கு

கொடுங்கள். அன்றைக்கு மோசேயின் கையை ஆரோனும், ஊரும் தாங்கினார்கள். மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்காக ரெவி дிமுவில் கைகளை உயர்த்திக்கொண்டே நின்றார். மோசேயின் கைகள் அசந்து போனது. மோசேயின் கைகள் கீழே விழுந்தபோது அமலேக்கியர்கள் இஸ்ரவேலர்களை யுத்தத்தில் மேற்கொண்டார்கள். மோசேயின் கைகள் உறுதியாய் நின்றபோது இஸ்ரவேலர் ஜெயம் பெற்றார்கள்.

தேவபிள்ளையே, நீ ஜெயம் பெறும்படி உனக்காக தேவ சமூகத்திலே மன்றாடுகிற கர்த்தருடைய ஊழியக்காரனுடைய கரத்தை நீ தாங்கவேண்டியது எவ்வளவு அவசியம்! அவர்கள் உனக்காக பாரம் எடுக்கிறார்களே. உன்னுடைய வாழ்க்கையில் போராட்டங்கள், சோதனைகள் வரும்போது அவர்கள் தேவசமூகத்தில் உங்களுக்காக மன்றாடுகிறார்களே! உன்னுடைய ஜெய ஜீவியத்தின் இரகசியம் அவர்களிடம் அல்லவா இருக்கிறது! அப்படியே, உங்களுக்காக பாரத்தோடு ஜெபிக்கிற, உங்களுக்கு ஆலோசனை கொடுக்கிற, உங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்துக்கு பிரயோஜனமாய் இருக்கிற கர்த்தருடைய ஊழியர்களுக்கு கொடுக்க ஒருபோதும் மறந்துபோகாதிருங்கள்.

உங்களை கர்த்தரிடத்தில் வழிநடத்துகிறவர்களை பட்டினி போட்டு, அவர்கள் உணவில்லாமல் தத்தளிக்கும்போது தூரத்திலிருக்கும் ஆடம்பரமான ஊழியத்திற்கு கொடுப்பதில் உங்களுக்கு என்ன பிரயோஜனம்? ஆகவே, தேவபிள்ளையே, உங்களுக்காக உத்தரவாதத்தோடு நிற்கிற தேவ ஊழியர்களுக்கு மகிழ்ச்சியோடுகூட கொடுங்கள்.

3. ஏழைகளுக்கு கொடுங்கள்:-

ஏழைகளுக்கு கொடுக்க மறந்துபோகாதிருங்கள். பழைய ஏற்பாட்டிலே அந்நியருக்கும், பரதேசிகளுக்கும் கொடுக்க வேண்டிய நியாயப்பிரமாணத்தைகூட இயேசு வேதத்தில் எழுதி வைத்தார். வயல் அறுவடை செய்யும்போது முற்றிலும் எடுத்துவிடாமல், அவர்களுக்கென்று சில கதிர் கட்டு

களை விட்டு வைக்க வேண்டும் என்றும், மரத்தில் கனிகளை பறிக்கும்போது அந்நியருக்கும் பரதேசிகளுக்கும் என்று சில வற்றை ஒதுக்கி வைக்கவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

வேதம் சொல்கிறது: ஏழையின் கூக்குரலுக்குத் தன் செவியை அடைத்துக்கொள்ளுகிறவன், தானும் சத்தமிட்டுக் கூப்பிடும்போது கேட்கப்படமாட்டான் (நீதி 21:13).

ஏழைக்கு இரங்காதவனுக்கு கர்த்தரும் இரங்குவதில்லை. அநேகர் தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்திக்கொண்டு கர்த்தரிடத்திலிருந்து வரும் ஆசீர்வாதங்களை நஷ்டப்படுத்தி விடுகிறார்கள்.

ஆகானின் தகப்பன் பெயர் என்ன தெரியுமா? என்று ஒரு போதகர் தன் சபையாரிடம் கேட்டார். யாருக்கும் தெரியவில்லை! வேதம் ஆகானின் தகப்பன் பெயரை 'கர்மி' என்று அழைக்கிறது.

'கருமி' என்ற தமிழ் சொல்லுக்கு ஈயா கஞ்சன்; பிசினித்தனம் பண்ணுகிறவன்; சுயநலக்காரன் என்று அர்த்தம். வேதத்திலுள்ள 'கர்மி'யின் குமாரன் தான் சுயநலமாக பாபிலோனிய சால்வையையும், பொன்னையும், வெள்ளியையும் எடுத்து தன் கூடாரத்தில் ஒளித்து வைத்துக்கொண்டான். கடைசியில் அவனும் அவன் குடும்பமும் கல்லெறியுண்டு மரிக்க வேண்டியதாயிற்று.

கர்மிகள் ஆகான்களை பிறப்பிக்கிறார்கள்! ஆகான்கள் தோல்வியைப் பிறப்பிக்கிறார்கள்! இதனால் இஸ்ரவேலர் முன்னேற முடியாமற் போகிறது!

கர்த்தருடைய ஊழியம் தடைபடுவதற்கும், குறைவு படுவதற்கும் காரணம், ஆவிக்குரிய உலகில் இருக்கும் கருமிகள் தானே! கர்த்தருக்குச் சேரவேண்டியதை வஞ்சிக்கும் கருமிகள்தானே! தமிழ் பழமொழி எச்சரிக்கிறது, ஈயார் தேட்டை தீயார் கொள்வர்!

4. **திக்கற்றவர்களுக்கும் விதவைகளுக்கும் கொடு:-**

வேதம் சொல்கிறது "திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது (யாக் 1:27).

திக்கற்ற பிள்ளைகளையும் விதவைகளையும் விசாரிக்கிற ஊழியத்தையும் அவர்களுக்குக் கொடுக்கிற கடமையையும் கர்த்தர் நம்முடைய கைகளிலே கொடுத்திருக்கிறார். அப்படிப்பட்டவர்களை ஒருபோதும் ஒடுக்கக்கூடாது. ஏளனமாக எண்ணக் கூடாது. மனம் சோர்ந்து போகும்படி பேசக் கூடாது.

செல்வந்தர்களுக்கே நாம் உதவி செய்தால் அந்த உதவியினால் என்ன பிரயோஜனம் உண்டு? உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? என்று கர்த்தர் கேட்கிறார் (மத் 5:46,47). உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே (மத் 5:42) என்று வேதம் சொல்கிறது. ஏழைகளுக்கு இறங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான் (நீதி 19:17).

உங்களுக்கு ஒரு கோடீஸ்வரரை தெரியும் என்று வைத்துக்கொள்வோம். அவர் உங்கள்மேல் மிகவும் அன்பு பாராட்டுகிறார். தேவையான உதவிகளைச் செய்கிறார். அவர் உங்களிடம் திடீரென்று வந்து எனக்கு ஒரு பத்து ரூபாய் தாருங்கள். மணி பர்ஸை எங்கேயோ தொலைத்து விட்டேன் என்று சொல்வாரானால் நீங்கள் உடனே மிகவும் மகிழ்ச்சியோடு கூட பத்து ரூபாய் என்ன, நூறு ரூபாய் தருகிறேன். நீங்கள் எனக்கு பின்பு கொடுத்தால் போதும் என்று சொல்லி உதவி செய்வீர்கள். அவருக்கு உதவி செய்ய

எனக்கு ஒரு தருணம் கிடைத்ததே என்று எண்ணி மகிழுவீர்கள்.

தேவபிள்ளையே, ஒவ்வொரு திக்கற்ற பிள்ளையையும் விதவையையும் நீங்கள் பார்க்கும்போது அவர்கள் மூலமாக கர்த்தர் உங்களிடத்தில் கடன் கேட்கிறார் என்பதை மறந்து போகாதிருங்கள். மட்டுமல்ல, நீங்கள் அவர்களுக்கு கொடுப்பதை கர்த்தர் திரும்ப கொடுப்பதாகவும் வாக்கு கொடுத்திருக்கிறார் (நீதி 19:17). தர்த்தர் நிச்சயமாகவே அந்த கடனை உங்களுக்கு திருப்பிக் கொடுப்பார். அவர் யாருக்கும் கடனாளி அல்லவே.

தரித்திரருக்கு சுவிசேஷம் அறிவிப்பதற்கு அன்று இயேசுவுக்கு ஒரு படகு தேவைப்பட்டது. பேதுரு அந்த படகை கொடுத்தார். இயேசு வெறும் படகாக விட்டுவிட்டு செல்லவில்லை. அங்கிருந்த இரண்டு படகுகளும் நிரம்பத்தக்கதாக ஏராளமான மீன்களைக் கொடுத்தார் (லூக் 5:2-7). தனக்கு இவ்வளவு அதிகமான மீன்களை கர்த்தர் உடனே கொடுப்பார் என்று அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. பிரமிப்படைந்தான்; கிறிஸ்துவின் பாதத்தில் விழுந்தான். தேவபிள்ளையே, நீ கர்த்தரிடத்திலிருந்து நிரம்ப பெற்றுக் கொள்ளும்படிக்கு திக்கற்ற பிள்ளைகளுக்கும், விதவைகளுக்கும், ஏழைகளுக்கும் சந்தோஷத்தோடு கொடுப்பாயாக.

''அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்" (மத் 6:4).

5. தேவையிலுள்ளவர்களுக்கு:-

நன்மை செய்யும்படி உனக்கு திராணியிருக்கும்போது அதைச் செய்யத் தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே (நீதி 3:27).

அநேகர் உன்னிடத்தில் நன்மை எதிர் பார்க்கிறார்கள். உதவிகளை எதிர்பார்க்கிறார்கள். உன்னால் முடிந்த வரை

அவர்களுக்கு கொடுப்பாயாக. ஒரு போதும் உன் மனதைக் கடினப்படுத்தாதே. உனது கைகளை மூடிக் கொள்ளாதே"

அநேகர் உன்னை நோக்கி வரும்படி உன்னை ஆசீர்வாதமான நிலையில் வைத்திருப்பது உனக்கு கிடைத்த பெரிய பாக்கியம் அல்லவா? கர்த்தர் உனக்கு சுகத்தையும் பெலத்தையும் ஆரோக்கியத்தையும் வல்லமையும் கொடுத்திருப்பது அவருடைய கிருபை அல்லவா?

ஜனங்கள் உன்னை நோக்கி வருகிறார்கள் என்றால் அது கர்த்தர் உனக்கு பாராட்டி இருக்கும் அன்பு என்பதை நீ நினைத்துக்கொள். கனியும் இலையுமுள்ள மரங்களை நோக்கித்தான் எதிர்பார்ப்போடு பறவைகள் பறந்து வருகின்றன. கனியுள்ள மரங்களையே பறவைகள் நாடும்.

பாழும் கிணற்றில் தண்ணீர் எடுக்க யாரும் வருவதில்லை! தண்ணீர் உள்ள கிணற்றை நோக்கியே ஜனங்கள் மகிழ்ச்சியோடு புறப்பட்டு வருகிறார்கள். தண்ணீருள்ள கிணற்றைப் போலவும் கனியுள்ள மரமாகவும் கர்த்தர் உன்னை வைத்திருக்கும் இந்த காலத்தில்தானே, உன்னால் முடிந்த உதவிகளை மற்றவர்களுக்குச் செய். கர்த்தருக்கென்று உற்சாகமாய்க் கொடு!

நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போது ஒரு வாசக அறிவிப்பு பலகையில் எழுதப்பட்டிருந்தது. "நீ இந்த உலகத்தின் வழியாக ஒரே ஒரு முறைதான் செல்கிறாய். உன்னால் மற்றவர்களுக்கு என்ன நன்மை செய்ய முடியுமோ அதை எல்லாம் செய்துவிடு" என்பதே அந்த வாசகம். அந்த வார்த்தை என் உள்ளத்தை ஆழஊடுருவியது. ஆம்! மனுஷன் பூமியில் இருந்து கடந்து போகும் போது அவன் ஒன்றும் கொண்டுபோகப் போவதில்லை. அவன் வெறுமையாகவே திரும்பிப்போகிறான். இடைப்பட்ட காலத்தில் அவன் கர்த்தருக்கும் ஏழை மக்களுக்கும் கொடுத்தால் அவன் நித்தியமான ஆசீர்வாதம் பெற்றுக் கொள்வான்! அல்லேலூயா!

தானியேலின் வாழ்க்கையைக் கவனித்துப் பாருங்கள். தானியேலை கர்த்தர் உயர்த்தினபோது தானியேல் தன் சிநேகிதர்களுக்கு நன்மை செய்ய தவறவில்லை. தானியேல் ராஜாவை வேண்டிக் கொண்டதின் பேரில் அவன் சாத்ராக்கையும், மேஷாக்கையும், ஆபேத்நேகோவையும் பாபிலோன் மாகாணத்து காரியங்களை விசாரிக்கும்படி வைத்தான் (தானி 2:49).

இன்று அநேகரைக் கர்த்தர் உயர்த்தும் போது தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளவே வெட்கப்படுகிறார்கள். நண்பர்களையோ, இனத்தவர்களையோ அருகில் கூட வராதபடி நடந்து கொள்கிறார்கள்.

ஐசுவரியவானுக்கு அன்று நன்மை செய்ய திராணி இருந்தது. அவன் வாசல் அருகே கிடந்த லாசருக்கு உதவி செய்ய எத்தனையோ வாய்ப்பு இருந்தது. தான் இரத்தாம்பரம் உடுத்தினான், சம்பிரதாயமாய், சம்பூரணமாய் சாப்பிட்டான். லாசருவுக்கோ ஒன்றும் இல்லை. மேஜையில் இருந்து விழும் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்.

ஆனால் காலம் மாறிற்று. இப்பொழுது அதே ஐசுவரியவான் லாசருவின் விரல்களிலிருந்து விழும் ஒரு சொட்டு தண்ணீருக்காக ஏங்க வேண்டியதாயிற்று. பாவம் ஐசுவரியவான் முன்பே கொடுக்காதபடியினால் இப்பொழுது அவனுக்கு ஒரு துளி தண்ணீர்கூட கிடைக்கவில்லை.

தேவபிள்ளையே, இந்த உலக வாழ்க்கையானது மாயையானது. சீக்கிரமாய் கடந்து போகக்கூடியது. எனவே உனக்கு ஐசுவரியம் இருக்கும்போதே மற்றவர்களுக்கு திக்கற்றவர்களுக்கு, ஏழைகளுக்கு, தரித்திரருக்கு கொடு. கர்த்தருக்கு உற்சாகமாய் பரிபூரணமாய் கொடுப்பாயாக. வேதம் சொல்கிறது. நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக. நாம் தளர்ந்து போகாமலிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம் (கலா 6:9).

இயேசுகிறிஸ்து இந்த பூமியில் இருக்கும்போது எல்லா ஜனங்களுக்கும் கொடுத்துக் கொண்டே இருந்தார். விடுதலையைக் கொடுத்தார், சுகத்தைக் கொடுத்தார், ஆரோக்கியத்தைக் கொடுத்தார், அன்பை கொடுத்தார், நன்மைகளைக் கொடுத்தார்.

வேதம் சொல்கிறது, ''அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்கு கிறவராயும் சுற்றித் திரிந்தார்'' (அப் 10:38).

உன்னால் முடிந்த நற்கிரியைகளைச் செய், ''மனுஷன் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது'' (மத் 5:16).

உன்னால் முடிந்த அளவு விசுவாசிகளுக்கு நன்மை செய், ''நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்'' (கலா 6:10).

நீ செய்யும் நன்மைகளை அந்தரங்கமாக செய், ''நீயோ தர்மஞ்செய்யும்போது, உன் வலது கை செய்கிறதை உன் இடது கை அறியாதிருக்கக்கடவது'' (மத் 6:3).

தேவபிள்ளையே, கர்த்தர் உன்னை விசேஷித்த ஆசீர்வாதத்தால் ஆசீர்வதிப்பாராக!

கொடுத்தலின் ஆசீர்வாதங்கள்!

கர்த்தருக்கு கொடுப்பதே பூமியிலே நமக்கு கிடைக்கிற ஒரு பெரிய பாக்கியம். நாம் கர்த்தருக்கு கொடுக்கும்போது, தேவன் அதிலே மகிழ்ந்து களிகூறுகிறார். நம்முடைய இருதயமும் சமாதானத்தினால் நிரம்புகிறது.

கர்த்தருக்கு நாம் காணிக்கைகளையும், தசமபாகங்களையும் விளைவின் முதற்பலன்களையும் கொடுக்கும்போது, கர்த்தர் மீண்டும் பணத்தை திருப்பிக் கொடுப்பாரென்று எதிர்பார்த்துக் கொடுக்க கூடாது. கர்த்தர் வெறும் பணத்தை மட்டும் தான் திரும்பக் கொடுப்பாரென்று எண்ணாதிருங்கள். கர்த்தர் அதற்கீடாக ஆத்துமாக்களை, சமாதானத்தை, மன நிறைவை, இரட்சிப்பின் சந்தோஷத்தை, ஆவியின் வரங்களை, கிருபைகளை, உயர்ந்த அந்தஸ்தை, மதிப்பை, மேன்மையை எல்லாவற்றையும் நமக்குத் தருவார்.

நாம் முதலாவது தேவனுடைய ராஜ்யத்திற்கென்று கொடுக்க வேண்டும். அவருடைய ராஜ்யம் என்பது சுவிசேஷத்தினால் ஜனங்களின் உள்ளத்திலே ஸ்தாபிக்கப் படுகிற இரட்சிப்பின் ராஜ்யம் ஆகும். சுவிசேஷம் அறிவிக்கப்படும் போது தேவனுடைய ராஜ்யம் பரவுகிறது, பெருகுகிறது. அந்த ராஜ்யத்திலே நாம் முக்கியமானவர்களாக இருக்கிறோம். எனவே முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அதனுடைய நீதியையும் தேடிக் கொடுங்கள்!

இந்த அத்தியாயத்திலே கர்த்தருக்கு நாம் கொடுப்பதினால் நமக்கு கிடைக்கும் ஆசிர்வாதங்களைப் பற்றி சற்று தியானிப்போமா?

1. **அது பாக்கியமானது:-**

''வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்'' என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்

தைகளை நினைத்துக்கொள்ளுங்கள் (அப் 20:35). ஆம். தேவனுக்கு கொடுப்பது நமக்கு ஒரு பெரிய பாக்கியம் தான். ஏனென்றால் தேவனுடைய சேவை பாக்கியமான ஒரு சேவை. கர்த்தருக்கு கொடுக்கிற நம்மை நிச்சயமாகவே பாக்கியவான்களாக்குவார்.

உலகத்திலேயே மகாப்பெரிய பணக்காரராய் வாழ்ந்தவர் அமெரிக்காவிலுள்ள ராக்பெல்லர். அவர் இளமையிலேயே மிகவும் சுறுசுறுப்பானவர். மிகவும் பெலனுள்ளவராக இருந்தார். சிறுபிராயத்திலிருந்தே ஒரு பெரிய செல்வந்தனாகி விட வேண்டுமென்ற ஆசை அவருக்கு வெறியாக இருந்தது. ஆகவே, தன்னுடைய நேரத்தையெல்லாம் செலவழித்து, மூளையறிவையெல்லாம் பயன்படுத்தி, உடல் உழைப்பையெல்லாம் கொட்டி உழைத்தார். அவர் விரும்பியபடியே தன்னுடைய முப்பத்தி மூன்றாவது வயதில் கோடீஸ்வரர் ஆனார். நாற்பத்தி மூன்றாவது வயதிலே உலகத்திலுள்ள மிகப்பெரிய கம்பெனியை நிர்வாகித்து திறமையாய் நடத்தினார். தனது ஐம்பத்தி மூன்றாவது வயதில் உலகத்திலேயே மிகப்பெரிய பணக்காரரென்று அவர் அழைக்கப்பட்டார்.

இரவும் பகலும் பணம் சம்பாதித்தாரே தவிர, அதை யாருக்கும் கொடுக்க அவர் பிரியப்படவில்லை. அவற்றையெல்லாம் தொழிலில் முதலீடு செய்தார். வெள்ளியும், பொன்னும் அவருடைய வீட்டில் கொட்டிக்கிடந்தது. செல்வாக்கையும், மதிப்பையும் அவர் பெற்றார். என்றாலும், ஒரு கஞ்சனாக ஈயா கருமியாக ஜீவித்து வந்தார்.

ஐம்பத்தி மூன்றாவது வயதின் இறுதியில் அவரை ஒரு கொடிய வியாதி பற்றிக் கொண்டது. அலோபீசியா என்ற வியாதியின் நிமித்தம் அவருடைய தலையிலும், முகத்திலுமிருந்த முடி அத்தனையும் கொட்டிப் போய்விட்டது. வழுக்கையானார். ஒன்றன் பின் ஒன்றாக பல வியாதிகளும், நோய்களும் அவரைப் பிடித்து வதைத்தது. அவரால் உணவு அருந்த முடியவில்லை.

அவர் யாருக்கும் கொடுக்காத சுவாபம் கொண்டவராக இருந்தபடியினால் மக்கள் அவரை விரும்பவில்லை. இனத்தவர்களும், சொந்தக்காரர்களும் அவரை வெறுத்து தள்ளினார்கள். கடைசியில் அவர் உயிருக்கு அஞ்சினபடியினால் அவர் பல மெய்காப்பாளர்களை வைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

அவரது ஐம்பத்தி நான்காவது ஆண்டில் டாக்டர்கள் அவருடைய நோய் முற்றியது என்றும், இனிமேல் அவர் பூமியில் வாழ முடியாது என்றும் தெரிவித்து விட்டார்கள். ஆகவே, அவர் மரித்தவுடன் என்ன நடக்கும் என்பதைக் குறித்து எல்லோரும் சிந்தித்தனர். அவருடைய அடக்க ஆராதனைக்காக பெட்டி செய்யப்பட்டது. எந்தக் கல்லறையில் வைக்கப்பட வேண்டும்? யார் அடக்க ஆராதனை செய்ய வேண்டும் என்பதையெல்லாம் அவரிடம் வந்து கலந்து பேசினார்கள்.

அந்த துயர நிலைமை அவருடைய இருதயத்தைப் பிழிந்தது. எவ்வளவு கோடிக்கோடியாய் சம்பாதித்தோம். என்ன பிரயோஜனம். பூமியில் இருந்து போவதில்லையே. வாழ்க்கை வீணாய் முடியப்போகிறதே என்று சிந்தித்தார். தான் இரவும், பகலும் பாடுபட்டு உழைத்ததினால் பலனென்ன? இதை உழைக்காத மற்றவர்களும் அனுபவிப்பார்களே என்று அதை நினைத்து எண்ணி, எண்ணி கலங்கினார்.

அந்த வேளையில்தான் ஒரு கிறிஸ்தவ போதகர் அவரைச் சந்தித்து கிறிஸ்துவையும், அவருடைய அன்பையும், கல்வாரியின் பெரும் நன்கொடையையும் விவரித்துச் சொன்னார். அந்த வார்த்தைகள் அவருடைய இருதயத்தை தொட்டது. அடுத்த நாள் காலையில் அவர் ஒரு புதிய மனிதனாய் எழுந்தார். தன்னுடைய செல்வங்களையெல்லாம் பல ஆலயங்களுக்கும், சபைகளுக்கும் மனப்பூர்வமாய் அள்ளி அள்ளி கொடுத்தார். ஏழைகளுக்கும், தேவையுள்ளவர்களுக்கும் மனப்பூர்வமாய் உதவி செய்தார். மிக துரிதமாக

''ராக்பெல்லர் தர்ம ஸ்தாபனம்" என்ற ஒரு ஸ்தாபனத்தை நிறுவி, அதன் மூலம் வியாதியுற்றோருக்கு, நோயாளிகளுக்கு உதவிச் செய்தார். ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தினார். அந்த ஸ்தாபனத்தின் மூலமாகத்தான் அநேக மருந்து வகைகளும், பென்சிலின் போன்ற விலை மதிக்க முடியாத மருந்தும் கண்டு பிடிக்கப்பட்டன.

அவர் தன்னுடைய செல்வத்தையும், பணத்தையும் அள்ளிக் கொடுக்க, கொடுக்க அவர் உற்சாகமுள்ளவரானார். ஒரு குழந்தையைப் போல சந்தோஷப்பட்டு களிகூர்ந்தார். வாழ்க்கை அவருக்கு இனிமையானதாக ஆரம்பித்தது.

ஐம்பத்திநான்காவது வயதில் மரணத்தை எதிர்பார்த்த அவருக்கு கர்த்தர் ஒரு புதிய இருதயத்தைக் கொடுத்தார். அந்த இருதயம் கர்த்தருக்கென்று கொடுத்து மகிழ்ந்து, களிகூர்ந்துக் கொண்டேயிருந்தது. அவர் மரிக்கவில்லை. வாழ்ந்தார். வாழ்ந்துக்கொண்டேயிருந்தார். தன்னுடைய தொண்ணூற்று எட்டாவது வயதில் கடைசி மூச்சை விடும் வரையிலும் கர்த்தருக்கென்று அவர் கொடுத்துக் கொண்டேயிருந்தார். பாக்கியமான வாழ்க்கையாக அவருடைய வாழ்க்கை விளங்கியது.

ஆம். கொடுப்பது உண்மையாகவே பாக்கியமானது தான்! அல்லேலூயா!

2. சுகந்த வாசனையானது:-

பிலிப்பியர், அப்போஸ்தலனாகிய பவுலுடைய ஊழியத்திற்கு தன்னால் இயன்றதை கொடுத்தார்கள். கர்த்தருடைய ஊழியர்களை உபசரிக்க அவர்கள் மகிழ்ச்சியோடு முன் வந்தார்கள். அதைக்குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் எழுதும்போது, ''எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது; உங்களால் அனுப்பப்பட்டவைகளைச் சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியாக எப்பாப்பிரோதீத்துவின் கையில் வரப்பற்றிக்

கொண்டபடியால் நான் திருப்தியடைந்திருக்கிறேன்" (பிலி 4:18) என்று மகிழ்ச்சியாய் குறிப்பிடுகிறார்.

பிலிப்பியரின் கொடுக்கிற அந்த இருதயமும், அனுப்பிய காணிக்கையும் சுகந்த வாசனையாக இருந்தன. தேவனுக்கு பிரியமான உகந்த பலியாக இருந்ததாம். எத்தனை அருமை யான அனுபவம் அது!

கர்த்தருடைய மனதை மகிழ்விக்க நாம் செய்ய வேண்டி யது கர்த்தருக்கு கொடுப்பதுதான். மனப்பூர்வமாக, மகிழ்ச்சியாக, நன்றியுள்ள இருதயத்திலிருந்து சந்தோஷ மாக கொடுக்கும் காணிக்கை சுகந்த வாசனையாக இருக் கிறது. நறுமணமாக திகழ்கிறது. கர்த்தருடைய இருதயத் தையெல்லாம் பூரிக்கச் செய்கிறது.

ஒரு முறை நான் சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்திலே நின்று கர்த்தரைப் பற்றிய துண்டுப் பிரதிகளை விநியோகித் துக் கொண்டிருந்தேன். பத்து வயது உள்ள ஒரு சிறு தம்பி என்னிடம் ஓடி வந்தான். அவனுடைய உடை அழுக்கு அடைந்ததாக இருந்தது. கந்தலும், கிழிசலுமாக இருந்தது. அவனுடைய தலையில் எண்ணெயில்லாமல் முடி சரியாய் வாரப்படாமல் அலங்கோலமாய் காட்சியளித்தது. அவனு டைய சரீரமெல்லாம் அழுக்கு திட்டுத்திட்டாய் படிந்திருந் தது. அவனைப் பார்த்தவுடனே அவன் மிகவும் ஏழை என்ப தையும், வறுமையின் அடித்தளத்தில் வாடுகிறவன் என்பதை யும் உடனே புரிந்துகொண்டேன். ஏதோ ஒரு ஹோட்ட லில் கிளீனராக வேலை செய்திருக்க வேண்டுமென்று நான் எண்ணினேன்.

அவன் என்னுடைய அருகிலே வந்து ஏசுவைப் பற்றி எழுதியிருக்கிற அந்தத் துண்டுப் பிரதிகளையெல்லாம் எனக்கு கொடுப்பீர்களா? நான் இயேசுவை நேசிக்கிறேன் என்று சொல்லிக் கேட்டான். நான் அவனுக்கு சந்தோஷமாக ஒவ்வொன்றாக எடுத்துக்கொடுத்தேன்.

கொஞ்ச தூரம் சென்று அவன் தன்னுடைய பாக்கெட் டிலிருந்த ஒரு பழைய கந்தல் துணி ஒன்றையெடுத்தான்.

அந்தத் துணியை பிரித்தபோது, அதற்குள்ளே ஒரு ரூபாய் நோட்டு எட்டாக மடித்து வைக்கப்பட்டிருந்ததை எடுத்தான். அவனுக்கிருந்த முழு ஆஸ்தியும் அதுதான். அதை என்னிடத்தில் கொண்டு வந்து, ஐயா, இதை கர்த்தருக்கென்று ஏற்றுக்கொள்ளுங்கள் என்றுச் சொல்லி நீட்டினுன்.

அவன் சொன்ன அந்த வார்த்தைகள் என் இருதயத்தை உடைத்தது. அதை வாங்குவதற்கு என் கைகள் கூசினது. என்ருலும், அவன் கர்த்தருக்கென்று கொடுக்கிருனே என்பதையுணர்ந்து என்னுடைய இரண்டு கைகளேயும் நீட்டி அவன் கொடுத்தக் காணிக்கையை வாங்கினேன். என்னுடைய இருதயம் உடைந்தபடியினுலே நான் கண்ணீரோடு அவனே வாழ்த்தி, ஆசீர்வதித்து ஜெபித்தேன். அந்த பணத்தை நான் மீண்டும் அவனிடத்தில் நீட்டி தம்பி, நான் இதை ஜெபித்து உன்னிடத்தில் தருகிறேன். கர்த்தர் உன்னே ஆசீர்வதிப்பார். சுகந்த வாசனேயாக அவர் உன்னே ஏற்றுக்கொள்ளுவர். நீ பிற்காலத்தில் அவருடைய ஊழியக்காரனுக வர வேண்டுமென்றுச் சொல்லி ஆசீர்வதித்தேன். அவனும் நானும் கர்த்தரில் அகமகிழ்ந்து களிகூர்ந்தோம்.

அவனேக் கட்டி அணைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு தெய்வீக அன்பு எனக்குள் உண்டானது. ஒரு தேவதூதனேப் பார்ப்பது போல அவனேப் பார்த்துக் கொண்டே நின்றேன்.

சுகந்த வாசனேயும், தேவனுக்கு பிரியமான உகந்த பலியுமாக அந்தக் காணிக்கையை நான் எண்ணினேன். நானே அவ்வளவு மகிழ்ச்சியாய் எண்ணினேனுகில் கர்த்தர் எவ்வளவாய் அதில் மகிழ்ந்திருப்பார்! தேவபிள்ளேயே, நீ கர்த்தருக்கென்று கொடுப்பதை கர்த்தர் மிகுந்த மகிழ்ச்சியோடு கூட சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளுவார். நீ அவருடைய சொந்தப் பிள்ளேயல்லவா? நீ கொடுப்பதையெல்லாம் அவர் மிகுந்த பரவசத்தோடு ஏற்றுக்கொள்ளுவார். உன் அருகிலேயே நிற்கிருர்.

3. அதிக ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும்:-

"கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" (மத் 25:23).

கொஞ்ச வருமானத்திலும் கர்த்தருக்கு கொடுப்பதில் உண்மையாக இருந்தால் கர்த்தர் ஆசீர்வதித்து உயர்த்து வார் என்பதை நான் என் அனுபவத்தில் கண்ட சாட்சியா கும். கர்த்தர் கொடுக்கிற வருமானத்தில் அவர் கேட்பது அதிகமானதல்ல. பத்தில் ஒன்பது பகுதியை நாம் எடுத்துக் கொள்ளலாம். ஒரே ஒரு பகுதியை மாத்திரமே அவர் கேட் கிறார். அதில் கூட நாம் உண்மையில்லாதவர்களாக இருந் தால் கர்த்தரிடத்தில் என்னை இன்னும் அதிகமாய் ஆசீர்வதி யும் ஆண்டவரே என்று கேட்பது எப்படி?

நான் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருவள்ளூரில் ஊழியம் செய்தபோது ராஜன் என்று பெயருள்ள ஒரு சகோ தரனைச் சந்தித்தேன். அவரோடு பேசிக்கொண்டிருக்கும் போது சொன்னார். கர்த்தருக்கு கொடுப்பதைக் குறித்து ஓய்வு நாள் பாடசாலையிலே நான் கற்றுக்கொண்டேன் சிறு வயதிலே என்னுடைய தாயார் எனக்கு கைச்செலவுக்குக் கொடுக்கும் நாலணா, எட்டணாவிலுங்கூட கர்த்தருக்கென்று தசம பாகத்தை எடுத்து வைப்பேன்.

பள்ளிப் படிப்பைத் தொடர முடியாத நான் தினமும் கூலி வேலைக்குச்சென்று மண் சுமந்து தினமும் இரண்டு ரூபாய் சம்பாதிப்பேன். கர்த்தருக்கென்று அதிலே தசம பாகம் செலுத்த தவறவில்லை. கர்த்தர் என்னை வேறு வேறு வேலையாக மாற்றி என்னை உயர்த்திக்கொண்டே வந்தார். சம்பளம் ரூ90/- ரூ 150/- ரூ 250/- என்று ஏறிக்கொண்டே வந்தது. தற்போது இரண்டாயிரத்திற்கு மேல் சம்பளமாக கர்த்தர் கொடுத்து என்னை ஆசீர்வதித்திருக்கிறார். இப்பொழுது நான் கர்த்தருக்கு ஒன்றரை மடங்கு தசம பாகம் கொடுக்கிறேன் என்று சொன்னார்.

தேவபிள்ளையே, கர்த்தருக்கு கொடுப்பதில் வரும் மகிழ்ச்சியை ருசித்துப்பார். கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும் என்று கர்த்தர் வாக்கு பண்ணியிருக்கிறார். ஆசீர்வாதத்தின் ஊற்றுக்களைத் திறந்து வை. உன் பொருளாலும், உன் விளைவின் எல்லா முதற்பலன்களாலும் கர்த்தரை கனம்பண்ணு.

4. வானத்தின் பலகணிகளைத் திறப்பார்:-

கர்த்தர் அதை திட்டமாக, வாக்குத்தத்தமாக, உறுதி மொழியாக நம்மோடு கூட சொல்லுகிறார். ஆம், நாம் கர்த்தருக்கு கொடுக்கும்போது நிச்சயமாகவே அவர் வானத்தின் பலகணிகளைத் திறந்து நம்மை ஆசீர்வதிப்பார்.

வேதத்தில் இரண்டு மடங்கு ஆசீர்வாதங்கள் உண்டு. எலிசா எலியாவை பின்தொடர்ந்தபடியினால் இரட்டிப்பான வரத்தைப் பெற்றுக்கொண்டான். யோபு பொறுமையோடு இருந்தபடியினால் இழந்துபோன எல்லாவற்றையும் இரட்டிப்பாய் திரும்பப் பெற்றுக்கொண்டான். நம்பிக்கையுடனே சிறைகள் அரணுக்குத் திரும்பும்போது இரட்டிப்பான நன்மையைத் திரும்பப் பெற்றுக்கொள்ள முடியும். யோசேப்புக்கு இரட்டிப்பான ஆசீர்வாதங்கள் கிடைத்தது.

பத்து மடங்கு ஆசீர்வாதத்தையும் வேதத்தில் நாம் வாசிக்கிறோம். தானியேல் பாபிலோனிலுள்ள ஞானிகளைப் பார்க்கிலும் பத்து மடங்கு ஞானம் உள்ளவனாக இருந்தான் (தானி 2:20).

விதைக்கிறவன் உவமையிலே முப்பது மடங்கு பலன், அறுபது மடங்கு பலன், நூறு மடங்கு பலன் என்று நாம் வாசிக்கிறோம். கர்த்தர் ஈசாக்கை நூறு மடங்கு ஆசீர்வதித்தார் (ஆதி 26:12).

ஆயிரம் மடங்கு ஆசீர்வாதத்தையும் வேதத்தில் நாம் வாசிக்கிறோம். உபாகமம் 1:11-ல் மோசே இஸ்ரவேல் ஜனங்களை ஆசீர்வதிக்கும்போது, ''நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரம் மடங்கு அதிகம் ஆகும்

படி உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொல்லியபடியே உங்களை ஆசீர்வதிப்பாராக'' என்று சொல்லி ஆசீர்வதித்தான்.

மேற்சொல்லிய பகுதிகளில் எல்லாம் இரண்டு மடங்கு, பத்து மடங்கு, முப்பது மடங்கு, நூறு மடங்கு என்றெல்லாம் பார்த்தோம். ஆனால் மல்கியா 3:10-ல் மடங்கு என்பதற்கு அளவில்லாதபடி வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமற் போகுமட்டும் என்று கர்த்தர் சொல்கிறதைப் பார்க்கிறோம். ஆம், கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கும்போது வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமற் போகுமட்டும் ஆசீர்வதிப்பார். தேவபிள்ளையே, அந்த ஆசீர்வாதம் உனக்கு வேண்டாமா? கர்த்தரிடத்தில் கொடுத்துப் பெற்றுக்கொள்ள மாட்டாயா?

5. பரலோகத்தில் பொக்கிஷம் சேரும்:-

கொடுப்பதினால் வரும் ஆசீர்வாதங்கள் அநேகமானவை. கர்த்தருக்கு கொடுக்கும்போது நமக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்கள் பூமியில் மாத்திரமல்ல, அது நித்தியம் வரையும் எட்டுகிறது. இயேசுகிறிஸ்து சொன்னார், பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை (மத் 6:20).

தேவபிள்ளையே, நீ பூமியில் கர்த்தருக்கு கொடுத்தால் அது பரலோக பாங்கிலே சேமிப்பாக வைக்கப்படும். நீ இங்கே கர்த்தருக்கென்று கொடுக்கிற ரூபாய் நோட்டுகளும், காணிக்கைகளும் அங்கே மாளிகைகளாக, முத்துக்களாக வைரங்களாக, வைடூரியங்களாக விளங்கும். ஒருநாள் அவற்றையெல்லாம் பார்க்கும்போது உன்னுடைய உள்ளம் எவ்வளவாக பரவசமடையும்.

ஒரு பாரம்பரிய கதை ஒன்றுண்டு. தோமா அப்போஸ்தலன் இந்தியாவிற்கு வந்தபோது இந்தியாவில் ஆட்சி செய்து கொண்டு வந்த குண்டபோரஸ் என்ற ராஜா

தோமாவிடம் தெய்வீக வல்லமையும், கை திறமையும் இருப்பதை கேள்விப்பட்டு அழைப்பித்தார். எனக்கு ஒரு அழகிய அரண்மனை கட்டித் தரமுடியுமா? என்றுக் கேட்டார். அதற்கு தோமா அப்போஸ்தலன் சம்மதிக்கவே ராஜா அரண்மனை கட்டிட செலவிற்கென்று திரளான பொன்னையும், வெள்ளியையும் கொடுத்தான்.

அவற்றையெல்லாம் வாங்கிய தோமா ஏழை எளியவர்கள், வறுமையில் வாடுபவர்கள் எல்லோருக்கும் வாரி, வாரி வழங்கி முழு மூச்சாய் சுவிசேஷ வேலையில் ஈடுபட்டார்.

பல மாதங்கள் கழிந்த பின்பு ராஜா தோமாவைக் கூப்பிட்டு, நீர் எனக்கு அரண்மனை கட்டி விட்டீரா? என்றுக் கேட்டார். ஆம், என்று பதில் வந்தது. எங்கே கட்டியிருக்கிறீர்? காண்பியும் என்று வினவினபோது, தோமா சொன்னார் ராஜாவே, பூமிக்குரிய அரண்மனைகள் காலத்தால் அழியக்கூடியது. ஆனல், நான் உமக்கு என்று பரலோக ராஜ்யத்திலே கட்டியிருக்கும் மாளிகையோ நித்திய நித்தியமாய் அழியாதது. அங்கே உமக்கு நான் மாளிகை கட்டும்படியாகத் தான் உமது பணத்தை ஏழைகளுக்கு அன்னதானமாக வழங்கினேன் என்றாராம்.

நித்திய வாழ்க்கையை குறித்து புரிந்து கொண்ட ராஜா தன்னை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்து, தோமா அப்போஸ்தலனுக்கு எல்லா வசதிகளையும் செய்துக் கொடுத்தார்.

தேவபிள்ளையே, பரலோகத்திலே உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள். வேதம் சொல்கிறது, நிலையான நகரம் நமக்கிங்கில்லை; வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம்.

கர்த்தருக்கு கொடுப்பது இம்மையிலும் நமக்கு ஆசீர்வாதம்; மறுமையிலும் நமக்கு ஆசீர்வாதம். பூமியிலும் அது மகிழ்ச்சி; பரலோகத்திலும் அது மகிழ்ச்சி. பரலோகத்தில் தேவன் நமக்கு ஆயத்தம் செய்திருக்கிற நித்தியமானவை

களைக் குறித்து சிந்திக்கும்போது, அந்த தேவனுக்கு நாம் கொடுக்க எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

கடைசி மூச்சிருக்கும் வரையிலும் கொடுத்துக் கொண்டேயிருப்போமாக. கர்த்தரை சந்தோஷப்படுத்திக் கொண்டேயிருப்போமாக. கர்த்தருடைய ஊழியங்களை ஆதரித்துக் கொண்டேயிருப்போமாக. ஆத்துமாக்களைச் சம்பாதித்துக் கொண்டேயிருப்போமாக.

மதுரையில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்து தலைமையாசிரியை பல புத்தகங்களை எழுதும்படி எனக்கு பண உதவி செய்துக் கொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் ஒரு கடிதத்தில் குறிப்பிட்டார்கள். நான் பூமியில் இருக்கிற வரையிலும் கர்த்தருக்காக மிகவும் அதிகமாக கொடுத்துக் கொண்டேயிருக்க விரும்புகிறேன் என்று எழுதினார்கள். ஆம், அவர்கள் தரிசனம் எவ்வளவு பெரியது.

தேவபிள்ளையே, நாம் பூமியிலிருக்கும் போது தான் கர்த்தருக்காக கொடுக்கும் பாக்கியம் நமக்கு கிடைக்கிறது மரித்தவர்களும், மௌனத்தில் இறங்குகிறவர்களும் கர்த்தருக்கு கொடுக்க வேண்டுமென்று விரும்பினாலும் அவர்களால் கொடுக்க முடியாது. நித்தியத்திலுங்கூட நாம் கர்த்தருக்கென்று கொடுக்கக்கூடியது ஒன்றுமில்லை. அவரே எல்லாவற்றையும் நமக்கு அருளிச்செய்கிறவர். ஆகவே, நீ பூமியிலே வாழும்போது தானே கர்த்தருக்காக எவ்வளவுக்கெவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு கொடுப்பாயாக. பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். ஆமென்! அல்லேலூயா!

எப்படி கொடுக்க வேண்டும்?

கர்த்தருக்கு நாம் எப்படி கொடுக்க வேண்டும்? எப்படி கொடுத்தால் அவர் நம்முடைய காணிக்கையில் பிரியமுள்ளவராய் இருப்பார்? எப்படி கொடுத்தால் அதை பரலோகம் அங்கீகரிக்கும்? எப்படிக் கொடுத்தால் தேவனிடத்திலிருந்து திரளான ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்ளுவோம்?

"எப்படி?" என்று அறிவதற்கு முன்பாக நாம் யாருக்கு கொடுக்கிறோம்? என்பதை சற்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒரு வேடிக்கையான கதை ஒன்று உண்டு. ஒரு கோழியும், ஒரு ஆடும் கடைத் தெருவின் வழியாக நடந்து போய்க் கொண்டிருந்ததாம். கடையில் வைக்கப்பட்டிருக்கிற பொருட்களைப் பார்த்து ஒன்றோடொன்று பேசி சம்பாஷித்து கொண்டே சென்றதாம். திடீரென்று ஒரு கடையில் நிறைய வெண்மை நிறமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த முட்டைகளைப் பார்த்ததும், கோழி மிகுந்த பரவசத்துடன் அந்த ஆட்டைப் பார்த்து, நான் மக்களுக்கு எவ்வளவு கொடுக்கிறேன் பார்த்தாயா என்று கேட்டது. அந்தமுட்டைகளைத் திரும்பித் திரும்பிப் பார்த்து கொக்கரித்துப் பரவசமடைந்தது.

இரண்டு கடை தள்ளி வந்தவுடன் அங்கே ஒரு கசாப்புக் கடை இருந்தது. அங்கே பல ஆடுகள் வெட்டப் பட்டுத் தொங்கிக் கொண்டிருந்ததை அந்த ஆடு அந்தக் கோழிக்கு சுட்டிக் காண்பித்து, மௌனமாகச் சொன்னது, நீ மனுக் குலத்திற்கு கொடுப்பது கொஞ்சம். முட்டையை கொடுத்து விட்டு நீ உல்லாசமாக நடந்து வருகிறாய். ஆனால், நானோ, என்னையே வெட்ட தியாகமாய் கொடுக்கிறேன், பார் என்று சொன்னது. சற்று சிந்தித்துப்பாருங்கள், நாம்

கர்த்தருக்கு கொடுப்பதற்கும், கர்த்தர் நமக்குக் கொடுப்ப தற்கும் எவ்வளவு பெரிய வித்தியாசம்!

இயேசு கிறிஸ்து தம்மையே முழுவதுமாக நமக்குத் தந்தார். கல்வாரி சிலுவையில் அவர் அடிக்கப்பட்டார்; நொறுக்கப்பட்டார்; பிழியப்பட்டார். தனது கடைசிச் சொட்டு இரத்தத்தையும் நமக்காக ஊற்றிக்கொடுத்தார். மட்டுமல்ல, பாவ மன்னிப்பை கொடுத்தார்; இரட்சிப்பைக் கொடுத்தார்; நித்திய ஜீவனைக் கொடுத்தார். பரலோக ஐசுவரியங்களையெல்லாம் நமக்கு வாக்குப் பண்ணியிருக்கிறார். அப்படிப்பட்ட தேவனுக்கு நாம் எப்படி கொடுக்க வேண்டும்?

1. ஒழுங்காக, கிரமமாக கொடுக்க வேண்டும்.
2. தேவன் கொடுத்த அளவின்படியே கொடுக்க வேண்டும்.
3. உற்சாகமாய் மனப்பூர்வமாய் கொடுக்க வேண்டும்.
4. தியாகமாய் கொடுக்க வேண்டும்.
5. அமுக்கி, குலுக்கி, சரிந்து விழும்படி கொடுக்க வேண்டும்.
6. இலவசமாய் கொடுக்க வேண்டும்.

இவைகளைக் குறித்து சற்று நாம் சிந்தித்துப் பார்ப்போமா?

1. ஒழுங்காக, கிரமமாக:-

கர்த்தருக்கு நாம் கொடுப்பது ஒழுங்காகவும், கிரமமாகவும் இருக்கட்டும். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார். "உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன் தன் வரவுக்குக் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன்" (II கொரி 16:2).

வாரத்தின் முதல் நாள் தோறும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறதைப் பாருங்கள். புதிய ஏற்பாட்டிலே வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக் கிழமையிலே சபை கூடி வந்தது. சபை கூடி வரும்போது அவர்கள்

வெறும் கையாக வராமல் கர்த்தருக்கு காணிக்கை கொண்டு வந்தார்கள். ஒழுங்காகவும், கிரமமாகவும் அதைத் தேவ சமுகத்தில் படைத்தார்கள்.

அப்படி கொடுக்கும்போதுதான் சபையின் வருமானத்தின் மூலம் திட்டமிட்டு பல ஊழியங்களைச் செய்ய முடியும். ஒருவேளை சபை பல மிஷனெரிகளை தாங்கக்கூடும். அந்த மிஷனெரிகளுக்கு மாதந்தோறும் சம்பளம் கொடுக்க வேண்டியதிருக்கும். ஆகவே, ஒழுங்காகவும், கிரமமாகவும் கொடுத்தால்தான் அது அவர்களுக்கு பிரயோஜனமாக இருக்கும்.

சில குடும்பத்தினர் சேர்ந்து வட இந்தியாவிற்கு செல்லுகிற ஒரு மிஷனெரியை பொறுப்பெடுப்பதுண்டு. இன்னும் சிலர் ஒரு ஆவிக்குரியப் புத்தகம் வெளியிடுவதற்குமனப் பூர்வமாக உவந்தளிப்பதுண்டு. சிலர் ஆண்டிற்கு ஒரு முறை ஒரு புத்தகம் வெளியிட வேண்டுமென்று அதற்கு சேமித்து வைப்வர்களுமுண்டு. திட்டமிட்டு செயல்படுத்தும்போது அது கர்த்தருடைய பணியை இன்னும் விரைவாக முடுக்கி விடுவதாக இருக்கும்.

சீன தேசத்திலே ஒரு விசுவாசி இருந்தார்கள். அவர்களுடைய பெயர் ''ஷி'' (Hsi). அவர்கள் ஒரு ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்கள். அவர்கள் தன்னுடைய வருமானத்தில் கர்த்தருக்கென்று தசமபாகம் எடுத்து வைத்தது மாத்திரமல்ல, தினந்தோறும் ஒரு வேளை உணவை குறைத்து அந்த உணவை நிறுத்தினதினால் கிடைக்கும் பணத்தைக் கொண்டு பல ஊழியங்களைத் தாங்கி வந்தார்கள். என் ஆண்டவருக்காக கட்டுப்பாடான ஜீவியம் செய்ய நான் என்னை ஒப்புக்கொடுத்திருக்கிறேன் என்று அவர்கள் சொன்னார்கள். அதன் விளைவாக கர்த்தர் அவர்களை ஆவியின் வரங்களால் அளவில்லாமல் நிரப்பினார். ஆயிரக்கணக்கான மக்கள் அவர்களிடத்தில் வந்து ஆறுதலையும், தேறுதலையும் மன சமாதானத்தையும் பெற்றுக்கொண்டார்கள்.

தேவபிள்ளையே, கர்த்தருக்கு ஒழுங்காக கிரமமாக கொடுப்பாயா?

2. தேவன் கொடுத்த அளவின்படி:-

கர்த்தர் குறைவான வருமானமுள்ளவர்களிடத்தில் இருந்து அதிகமாய் எதிர்பார்ப்பதில்லை. அதிகமான வருமானமுள்ளவர்களிடத்திலிருந்து குறைவாகவும் எதிர்பார்ப்பதில்லை. கர்த்தருடைய பிரமாணம் சமநிலை பிரமாணமாகும். எல்லோருக்கும் பொதுவாக பத்தில் ஒன்று என்று கர்த்தர் வைத்திருக்கிறார்.

லேவியராகமம் 29-ல் தசம பாகத்தைப் பற்றிய உபதேசங்களை நாம் வாசிக்கிறோம். அது நியாய பிரமாணத்தின் கட்டளையாக அவர்களுக்கிருந்தது.

புதிய ஏற்பாட்டில் நியாய பிரமாணத்தின் அடிமைதனத்தில் இருந்த நாம் விடுதலையாக்கப்பட்டிருந்தாலும் கூட அன்பின் பிரமாணத்திற்கு உட்பட்டவர்களாக இருக்கிறோம். அநத அன்பின் பிரமாணம் அதிகமாகவே கொடுக்கும்படி தூண்டுகிறது. கடமைக்காக கொடுக்காமல் மனப்பூர்வமாய் கொடுக்கும்படி நம்மை ஏவி எழுப்புகிறது.

பார்வோன் எகிப்தியரிடத்தில் விளைச்சலில் எல்லாம் ஐந்தில் ஒரு பகுதியை கட்டாயமாக வசூலித்தான் (ஆதி 41:34). அதாவது பத்தில் இரண்டு பகுதி பார்வோனைச் சேர்ந்தது.

ஆனால், கர்த்தர் மிகுதியாய் நம்மிடத்திலே கேட்கவில்லை. அதைக் கட்டாயப்படுத்தவுமில்லை. அன்பின் பிரமாணத்தினாலே கர்த்தர் மேலுள்ள நேசத்தில் நாம் கர்த்தருக்கு அதிகமாகவே கொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம். நாம் விளைவின் முதற்பலனோடு கூட நம்மை கர்த்தருக்கு கொடுக்க கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறோம். நம்முடைய ஆவி, உடல், பொருள் அத்தனையும் கர்த்தருடையது.

3. உற்சாகமாய், மனப்பூர்வமாய்:-

வேதம் சொல்லுகிறது: "அவனவன் விசனமாயுமல்ல" கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தப்படியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிட்த்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" (II கொரி 9:7).

அநேகர் கர்த்தருக்கு கொடுக்கும்போது முறுமுறுப்போடும், கசப்போடும், எரிச்சலோடும் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் கொடுக்காமலிருப்பதே நல்லது. இன்னும் சிலர் கர்த்தருக்கு கொடுப்பதாக எண்ணாமல் போதகருக்கும், காரியதரிசிக்கும், பொக்கிஷதாரருக்கும் கொடுப்பதாக எண்ணிக் கொடுக்கிறார்கள். கொடுக்கும்போதே இந்தக் காணிக்கையை யார் ஏப்பம் விடுவார்களோ? எந்த முதலை விழுங்குமோ? என்ற சந்தேகக் கண்களோடு கூட காணிக்கை பெட்டியில் கொண்டுப் போடுகிறார்கள். அதைக் கர்த்தர் எப்படி அங்கீகரிப்பார்? கர்த்தருக்கு கொடுக்கும்போது ஜெபத்தோடும், பயபக்தியோடும் கர்த்தருடைய காயப்பட்டக் கரங்களில் கொடுக்கிற உணர்வோடு கூட கொடுக்கும்போது தான் அது மிகுந்த ஆசீர்வாதமானதாக இருக்கும்.

பழைய ஏற்பாட்டில் ஒருவன் பலி செலுத்த வரும்போது அவன் உற்சாக மனதோடு கூட பழுதற்ற காளையை செலுத்த வேண்டும். தலையீற்றுக்களில் முதன்மையானதை கர்த்தருக்கு கொடுக்க வேண்டும்.

தேவபிள்ளையே, கர்த்தர் முகத்தைப் பார்க்கிறவரல்ல. அவர் இருதயத்தைப் பார்க்கிறார். எண்ணங்களை அறிகிறார்; உள் நோக்கங்களை அவர் தெரிந்துக் கொள்ளுகிறார். மனப்பூர்வமாய், உற்சாகமாய் கொடுக்கிற காணிக்கைகளில் மாத்திரமே அவர் பிரியமுள்ளவராக இருக்கிறார்.

அநேகர் கர்த்தரை தாங்கள் நேசிப்பதாக கூறுகிறார்கள். இரவும், பகலும் நன்றி செலுத்துகிறவர்களாக இருக்கிறார்கள். நல்லது தான். ஆனால், காணிக்கை விஷயத்திலே

கை முடக்கிக் கொண்டிருக்கிறார்கள். வார்த்தையில் நன்றி யிருக்கிறது. செயலில் நன்றியில்லை. அதற்குப் பெயர் மாய்மாலம். அன்பும், நன்றியும் செயலில் வெளிப்பட வேண்டும்.

ஆப்பிரிக்க காடுகளுக்கு மிஷனெரியாகச் சென்ற டேவிட் லிவிங்ஸ்டன் மிகுந்த உதார குணமுள்ளவர். தன் சொத்துக் களையெல்லாம் தியாகமாய் ஊழியத்திற்கென்று கொடுத்து விட்டு முழு நேரமாக கர்த்தருக்கு பணி புரிந்தார்.

ஆப்பிரிக்க காடுகளில் மிகுதியான வெப்பத்தில் பிர யாணம் செய்தபடியினால் அவர் வயிற்றில் புண் வந்தது. அதை ஆற்றும்படி ஆட்டுப் பாலுக்காக பால் தரும் ஒரு ஆட்டை அவர் வளர்த்து வந்தார்.

அந்த காடுகளிலுள்ள ஒரு ஆப்பிரிக்க மலை ஜாதி தலைவன் இவரைக் காண வந்தபோது அவன் அந்த ஆட்டை மிகவும் விரும்பினான். லிவிங்ஸ்டனுக்கு அந்த ஆடு மிகவும் தேவை யாக இருந்த போதிலும் கூட அதைப் பொருட்படுத்தாமல் அவனுக்கு அதைப் பரிசாக கொடுத்துவிட்டார். ஆப்பிரிக்க தலைவனுடைய உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்தது. அவன் அவருக்கு ஏதாவது ஒன்று கொடுக்க வேண்டுமென்று விரும்பி தனது ஈட்டியைப் பரிசாகக் கொடுத்து விட்டுச் சென்றான்.

தன் கையில் தனக்கு பரிசாகக் கிடைத்த ஈட்டியைப் பிடித்துக் கொண்டு நடந்த போது அவருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. காரணம், வழி நெடுக உள்ள மலை ஜாதியினர் அவருக்கு முன்பாக விழுந்து பணிந்தார்கள். ஏராளமானப் பொருட்களை அன்பளிப்பாகக் கொடுத்தார் கள். அநேகம் ஆடுகளும் அவருக்கு அன்பளிப்பாகக் கிடைத்தன. காரணம், அவர் கையில் இருந்த ஈட்டி அவர்கள் தலைவனுடைய ஈட்டி என்றக் காரணத்தினால் தான்.

ஒரு ஆட்டை மனப்பூர்வமாக கொடுத்த அவருக்கு எத்தனையோ ஆடுகள் கிடைக்கும்படி அருள் செய்தார் நம் அருமை ஆண்டவர்!

4. தியாகமாய் கொடுங்கள்:-

இயேசு ஒருநாள் காணிக்கை பெட்டியண்டையில் உட்கார்ந்துக் கொண்டிருந்தார். பலரும் காணிக்கை போட்டுக் கொண்டு செல்வதை கவனித்துக் கொண்டேயிருந்தார். செல்வந்தார்கள் தங்கள் திறட்சியில் இருந்தே கொடுத்தார்கள். புகழ் பெற விருப்புவோர் ஆடம்பரமாக கொடுத்தார்கள். ஆனல், ஒரு ஏழை விதவையோ தியாகமாய் கொடுத்தாள். தனது ஜீவனத்திற்காக இருந்த கடைசி இரண்டுக் காசையும் மனப்பூர்வமாய் கர்த்தருக்கென்று கொடுத்து விட்டாள். கிறிஸ்துவினிடம் ''சபாஷ்" வாங்கினவள் அந்தப் பெண். கர்த்தரிடம் பாராட்டு வாங்கினப் பெருமை அவளுக்குண்டு. இயேசு சொன்னர்: அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துத் தேவனுக்கென்று காணிக்கை போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டு விட்டாள் என்ருர் (லூக் 21:4).

தாகூர் எழுதிய கீதாஞ்சலியில் ஒரு கதை வருகிறது. ஒரு பிச்சையெடுக்கும் பெண் தனக்கு அன்றைக்கு கிடைத்த கொஞ்சம் அரிசியோடு காட்டுப் பாதையில் போய்க் கொண்டிருந்தாள்.

எதிர்பாராதபடி எதிரே ஒரு மகிமையான ரதத்தில் தன் தேச ராஜா வருவதைக் கண்டாள். அவருடைய கிரீடம், உடைகளெல்லாம் தங்க மயமாக பளபளத்துக்கொண்டேயிருந்தது. அவர் தன் இரதத்தை நிறுத்தி இந்தப் பெண்ணிடம் வந்து, "எனக்கு ஏதாவது கொடுப்பாயா?" என்றுக் கேட்டார்,

அவளுக்கோ ஒரே எரிச்சல், நான் பல இடங்களுக்குச் நடந்துச் சென்று கொஞ்சம் அரிசி பிச்சை வாங்கி வைத்தி

ருக்கிறாள். இதை அவளுக்கு கொடுத்தால் நான் என்ன செய்வது? என்று ஏறு முறுத்துக்கொண்டே பையினுள் கைவிட்டு வேண்டா வெறுப்போடு ஐந்து அரிசிகளை ராஜாவுக்கு கொடுத்தாள். அத்துடன் அந்த ராஜாவும் மறைந்தார்; அந்த ரதமும் மறைந்தது.

அந்தப் பெண் தன் வீட்டிற்குச் சென்று அரிசிப் பையைக் கொட்டியபோது அங்கே ஐந்து அரிசி பொன்னுக மாறியிருப்பதைக் கண்டாள். அப்பொழுதுதான் இரதத்தில் வந்தவர் ராஜா, அதிசயங்களைச் செய்கிறவர் என்பதைப் புரிந்துக் கொண்டாள். நான் அந்த ஐந்து அரிசி மட்டுமே போட்டேனே; அதிகமாய் போட்டிருந்தால் அதிகமான பொன் மணிகள் எனக்கு கிடைத்திருக்குமே. அந்த ராஜாவுக்கு அதிகமாய் கொடுக்காமல் போனேனே. என்று மிகவும் வருந்தினுள்.

நாம் பரலோகத்திற்குச் சென்றபோதும் நமக்கு ஒரு வருத்தம் இருக்குமேன்றால் அது நாம் பூமியில் இருக்கும் போது கர்த்தருக்கு அதிகமாய் கொடுக்காமல் போனேனே என்கிற வருத்தமாகவே இருக்கும்.

தேவபிள்ளையே, உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்

(நீதி 3:9, 10).

ஆவிக்குரிய நூல்கள்

ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்கும், ஆத்துமா பெலன் கொள்வதற்கும் ஆவிக்குரிய நூல்கள் இன்றியமையாதவை.

ஏறக்குறைய 75 க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதிய சகோ, J. சாம் ஜெபத்துரை அவர்கள் இந் நூலையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

பதினாறு ஆண்டுகள் அரசாங்கத்தில் பணியாற்றிய அவர், தன் வேலையை ராஜினாமா செய்து விட்டு முழுநேர ஊழியத்தில் 1965 ஆண்டு தீவிரமாக இறங்கினார். வல்லமையான மேடைப் பேச்சினாலும் எழுத்து ஊழியத்தினாலும் ஆயிரக்கணக்கானோரை அவர் கர்த்தருக்குள் வழி நடத்தியிருக்கிறார். இவர் கர்த்தரின் எழுத்தாணி.

புத்தக ஊழியத்தை ஊக்குவியுங்கள். அநேக ஆவிக்குரிய புஸ்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசிர்வதிப்பாராக !

புஸ்தகங்கள் கிடைக்கும் இடம்.

J. சாம்ஜெபத்துரை M.A.
50, ரெயில்வேஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.